சுதேசமித்திரன்

13—6—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY





இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

1

குழந்தை அழுகிறது

(ஒரு காரணமுமின்றி)

2

அதற்கு

கிரைப் ஸிரப்

கொடுங்கள் (அருசி யில்லாதது)

3

குழந்தை சிரிக்கிறது

ஒரு ITL தயாரிப்பு

தயாரிப்பவர்கள் :
மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரெடரி லிமிடெட்., மல்லேஸ்வரம், பெங்களூர்.

BGK-16TM

விற்பனை ஏஜெண்டுகள் :

பெஸ்ட் & கம்பெனி, லிமிடெட்., த. பெ. 63, சென்னை.

உங்கள் எதிர்காலம்



பணமில்லைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம்,. படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

Astrologer & Journalist, MADRAS 5.



A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்கு அத்தாக்ஷி மைக்ருஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீக்ஷை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர் பாக்கு, பால்கோவா, பிஸ்கட், கேக், உப்பிட்டு சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும், பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல்தரமான ஜவ்வரிசி ஈரோடு, சேலம் மஞ்சள் ரகங்கள், நெ. 1. மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும், பீடிக்கும் வேண்டிய உயர்தரமான புகையிலை ரகங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடைபோடக்கூடிய பைபீல்ட் வேயின் மெஷின் தராசும் சப்ளை செய்கிறோம். கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

ஜவ்வரிசி தயாரிக்கும் முறை அடங்கிய புத்தகம் வேண்டுவோர் ரூ. 1. அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கும் சாம்பிளுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமணியம்,

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ், அண்டு மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள் ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.



தேகப்பயிற்சி செய்வோருக்கு மிக அவசியமான சக்தியை அம்ருதா அளிக்கிறது. இந்த ரத்த சுத்தி திராவகம் இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவருக்கும் இன்றியமையாதது. வாய்க்கு மிக இனிப்பானது, குணத்தில் சிறந்தது. அரிய மூலிகைகள், பழச் சத்துக்களைக்கொண்டு உயர்ந்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டு வரும் இந்த ஜீவ சக்தி திராவகம் யாவருக்கும் இணையற்ற நண்பன்.

கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ்

மலபார், கோச்சி, திருவாங்கூர் தென் கன்னடத்துக்கு

ஏஜண்டுகள்:

கோச்சி மெடிகல் ஸ்டோர்ஸ்

மட்டஞ்சேரி (கொச்சி)

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுகிறீர்கள். பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான **ஆர். கிருஷ்ணு** பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. **N. B.** 25 காலி உறை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.

S. M. கிருஷ்ணு அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு,
மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ.வில் வியாபார துடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸலேன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள் மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும் அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்

M. R. **பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

THE TRUTH IN YOUR HOROSCOPE

YOUR REAL LIFE TOLD FREE

Would you like to know what the Stars indicate for you, some of your past experiences, your strong and weak points. etc? Here is your chance to test FREE the skill of Pundit Tabore India's most famous Astrologer, who by applying the ancient science to useful purposes has built up an enviable reputation? The accuracy of his predictions and the sound practical advise contained in his Horoscopes on business, speculations, Finance Love affairs, Friends Enemies, Lotteries, Travels. Changes Litigation Lucky Times, Sickness etc., have astounded educated people the world over. GEORGE MACKEY of New York believes that Tabore must possess some sort of second sight.



To popularise his system Tabore will send you Free your Astral-Interpretation if you forward him your full name (Mr. Mrs. or Miss). address and date of birth (English Calendar) all clearly written by yourself. No money wanted for Astrological Work, Postage etc., but send about 6 Annas (Stamps) for stationery, testimonials and other interesting literature. Tabore believes in fair dealings and all work for which he receives any payment is on the basis of satisfaction guaranteed or full money refunded. You will be amazed at the remarkable accuracy of his statement about you and your affairs. Please write and correspond in ENGLISH only. Write now as this offer may not be made again. No personal interviews, all consulations by mail only. Address: **PUNDIT TABORE (Dept. 337), Upper Forjett Street: Bombay 26.**

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம்	,,	ரூ. 2.
மூன்றாம் பாகம்	,,	ரூ. 2.

தபாற் செலவு அணா 10.

முன்பணம் அனுப்பவேண்டும்.

V. P. P. அனுப்புவது கிடையாது.

மானேஜர்:
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

ஸ்ரீ கௌமார நாடி ஜோதிஷாலயம்

நெ. 2, ஹைரோட், ராயப்பேட்டை, சென்னை 14.

★

புராதன ஓலைச்சுவடிகளிலிருந்து இறந்தகால நிகழ் கால, எதிர்கால பலன்களை விவரமாக எழுதிக்கொடுக்கப் படுகிறது. ஜமீந்தார்களும், வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும் ஆச்சரிய கரமான பலன்களின் உண்மையைக் கண்டு வியப்படைவதால் அனேக நூற்றாண்டுகளாக உலகப் பிரசித்தி பெற்று விளங்கி வருகிறது. விவரம் விரும்புவோர் நேரில் அறியலாம்.

பண்டிட் செ. தங்கவேல் நாடார்.

பிரபல திருமணம்



வடகோவனூர்பண்ணை ஸ்ரீ V.S. ராமதுரையய்யர் புத்ரி சௌ. கௌசல்யாவுக்கும், காளியாக்குடி பிரபல மிராசுதார் கணபதி சுப்பிரமணியய்யர் குமாரன் சிரஞ்சீவி K. G. கிருஷ்ணமூர்த்திக்கும் 21—5—48ல் விவாஹம் சிறப்பாக நடந்தது. சாயங்காலம் வரவேற்புக்கும் G. N. B., கிருஷ்ணன், மணிகச்சேரிக்கும் அனேக பிரமுகர்கள் விஜயம் செய்து இருந்தனர்.

தந்தி விலாசம்: "சுகந்தம்."

சுக வாழ்விற்கு சுகந்தம் நிறைந்த
"3001" ஜவ்வாது பத்திகள்
இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த
"301" ஜவ்வாது பத்திகள்
நறுமணத்திற்கு நற்கியாதி வாய்ந்த
"31" ஜவ்வாது பத்திகள்
ஆரோக்கிய வாழ்விற்கு
"ஆசாத்" பாக்கட் பத்திகள் &
"ஆசாத் ஹிந்த்" குழாய்பத்திகள்

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,

நெ. 39 லெக்ஷிமிபுரம் 6-வது தெரு, மதுரை
பிராஞ்சு: நெ. 4 அப்பாஜிராவ் தெரு, பெங்களூர் சிடி.
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை





கலியாண வெகுமதிகளுக்கு
பல ஊர்
பட்டு & நூல்
ஜவுளி ரகங்கள் சரசமாய்
கிடைக்கும் இடம்

ராம விலாஸ்

S.N. ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—	திருச்சி கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி	15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

வியாபாரிகளுக்கோர் நற்செய்தி!

உங்கள் வியாபாரப் பொருள்களை நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கோ, அல்லது உங்களுக்குத் தேவையான சாமான்களை நியாயமான விலையில் சென்னையிலிருந்து பெறுவதற்கோ எங்களிடம் தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள்.

A. H. டிரேடிங் கம்பெனி,
247, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை—1.

நேர் வகிடானலும் சரி, கோணல் வகிடானலும் சரி, வாரி எடுத்து இளம் பிறை வடிவாகக் கட்டினலும் சரி, கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்கமாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும், கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனல் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங்கூந்தலைப் பெறுங்கள். சிறுவயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணு 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது
கோயமுத்தூர்.

ஜோதிஷ வித்வான்
V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க......................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு..............................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க...ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

அழகிய பித்தளை, தாமிர, வெண்கல பாத்திரங்களுக்கு
கோவையில் சிறந்த இடம்.

பள்ளிக்கூட ஹாஸ்டல்கள், காண்டின்கள் இன்னும்
சர்க்கார் இதர ஸ்தாபனங்களுக்கும் சப்ளை செய்பவர்கள்

K. இராமச்சந்திரன்,
பாத்திர வியாபாரம்,
பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

குகன்
சோப்புகள்

சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும்
சிறந்தது.



குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R.ராமசந்திர செட்டி & கோ, கடைவீதி...சேலம்

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாய மற்றது. 1000-க்கணக்கானபேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்திபெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச்செவிடு காதில் இரைச்சல் மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதி பெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை,
தையல் இலை
சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும்
எங்களிடம் கிடைக்கும்.
S.மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.
ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்
மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை
வெளிவந்து விட்டது!
வாசனை பாக்குத்தூள்
காலணுவுக்கு இரண்டு.
சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை.

தயாரிப்பவர்:
மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ வைகாசி௴ 31௳ ★ 1948-௵ ஜூன்௴ 13௳ No. 20

உதகை மகாநாடு

சென்ற சில தினங்களுக்கு முன் கூடிய ஆசிய-தூரக்கிழக்குப் பொருளாதாரக் கமிஷன் கூட்டத்தில் பண்டிதநேரு வெளியிட்ட அறிவுரை மேனாடுகள் பலவற்றின் கண்ணைத் திறந்துவிடுமென்பது திண்ணம். உலகின் மொத்த ஜனத்தொகையில் பாதிக்குமேல், அதாவது நூறுகோடி மக்களுக்குமேல் வாழும் பிராந்தியம் இது எனினும் இவர்கள் வாழ்வின் அவல நிலையில் தக்க கவனம் செலுத்தி இவர்களைக் கைதூக்கிவிட இதுவரை உருவானமுயற்சியெதுவும் நடந்ததில்லை. பண்டித நேரு சுட்டிக்காட்டியது போல, சர்வதேச ஸ்தாபனங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கும் மேனாட்டு ராஜதந்திரிகளின் அக்கரையெல்லாம் முக்கியமாக தங்கள் பிரதேசத்தைப் பொறுத்த மட்டில்தான். இந்நிலை தற்போது ஓரளவு மாறியிருக்கிறது. இதன் விளைவே ஐக்கிய நாடுகள் சங்க ஆதரவில் இப்போது ஆசிய-தூரக்கிழக்குப் பிராந்தியத்தின் பொருளாதாரத்தைச் சீர்படுத்துவதற்கான வழி வகைகளை வகுக்க ஒரு தனிக் கமிஷன் ஏற்பட்டிருப்பது.

இப்பிராந்தியத்தில் இருந்து வருவது போன்ற இவ்வளவு கேவலமான ஒரு வாழ்க்கைத்தரம் நாகரிக உலகில் எங்குமில்லை. இதற்கு முக்கியகாரணம் இப்பிரதேசங்களில் பெரும்பாகம் நெடுநாளாக அந்நியருக்கு அடிமைப்பட்டுக்கிடந்திருப்பதுதான். இங்குள்ள வளங்களை சுரண்டிச்செல்வதில் அவர்கள் சிறிதும் தயக்கம் காட்டியதில்லை. இங்குள்ள மக்கள் எக்கேடு கெட்டாலென்ன என்பதே அவர்கள் காட்டி வந்திருக்கும் மனோபாவம். தங்கள் சொந்த நாட்டினர் செழிக்க எவ்வாறாவது வழி தேடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு கருத்து எதுவுமில்லை, இந்நோக்கத்துடன் அவர்கள் கையாண்டுவந்த முறைகளால்இப்பிராந்திய நாடுகளின் பொருளாதாரம்அடியோடு சீர்குலைந்துவிட்டது. ஆனால் இக்கொள்ளையை ஆசிய மக்கள் அமைதியாகச் சகித்துக்கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது. அவர்களிடையே ஏற்பட்ட விழிப்பைத் தொடர்ந்து சமீபகாலத்தில் பல ஆசிய நாடுகள் அந்நியர் பிடிப்பிலிருந்து விடுபட்டுவிட்டன.

ஆனால் ஹாலந்து,பிரான்ஸ் போன்ற தேசங்களிலுள்ள ஏகாதிபத்தியப் பித்தர்களுக்கு இன்னும் ஞானோதயம் ஏற்படவில்லை. இனியும் இப்பிராந்தியத்தில் பழைய முறையில் சாம்ராஜ்யங்களைக் கட்டியாள முடியுமென்று அவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர். எனவேதான் இந்தோனேஷியா, இந்தோ-சீனா முதலிய இடங்களிலிருந்து அவர்கள் வெளியேற இன்னும் மறுத்து வருகின்றார்கள். இவ்வாறு அந்நாடுகளுடன் அக்கிரமத் தொடர்பு கொண்டிருப்பதால்தான் ஹாலந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் இன்று ஆசியா-தூரக்கிழக்குப் பொருளாதாரக் கமிஷனில் இடம்பெற்றிருக்கின்றனவென்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இக்கமிஷனின் வேலை உருப்பட இந்தோனேஷியரின் ஒத்துழைப்பு இன்றியமையாததாயிருந்தும், அவர்களுக்கு இதில் இடமில்லை.

குறிப்பாக தென்கிழக்கு ஆசிய நாடுகள் எவ்விதத்தடையுமின்றி தங்கள் இஷ்டம் போல் ஒன்றுபட்டு ஒத்துழைக்கக்கூடிய வசதி இருக்குமானால், இப் பிராந்தியத்தின் பொருளாதாரம் கூடியவரை துரிதமாகச் சீர்திருந்தக்கூடும். ஆனால் ஹாலந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் அதற்கு வழி விடப் பிடிவாதமாக மறுத்து வருகின்றன. ஆசியா-தூரக்கிழக்குப் பொருளாதாரக் கமிஷனை ஐக்கிய நாடுகள் சங்கம் நியமித்ததன் நோக்கம் உண்மையில் நிறைவேற வேண்டுமானால், பண்டித ஜவாஹர் சுட்டிக் காட்டியதுபோல், முதலில் இப்பிராந்தியத்தில் எந்தப்பகுதியிலும் அந்நிய ஆதிக்கம் இல்லாது செய்வது அத்தியாவசியம். இதில் தங்கள் கடமையை ஹாலந்து முதலிய நாடுகள் தாங்

—அடுத்த பக்கம்



உதகமண்டலத்தில் 3 தினங்களாக நடைபெற்றுவரும் ஐ. நா. ஆசிய தூரக்கிழக்கு பொருளாதார மகாநாட்டை இந்தியா பிரதம மந்திரி நேரு துவக்கிவைத்துப் பேசுகிறார். அவரது வலது கைப்புறத்தில் ஐ. நா. சபைக் காரியதரிசியின் பிரதிநிதி மிஸ்டர் கோல்டெட் அமர்ந்திருக்கிறார். அவரது இடது புறத்தில் மிஸ்டர் குவார்டர்னேவும், டாக்டர் பி. எஸ். லோகநாதனும், சென்னை கவர்னர் ஸர் ஆர்ச்பால்டு நையும் வீற்றிருக்கின்றனர்.]

களாக உணரவில்லையெனில் அவைகளுக்கு அதை இடித்துணர்த்துவது ஐக்கியநாடுகள் சங்கத்தின் உடனடியான வேலை.

ஆசியா-தூரக்கிழக்கு நாடுகள் தங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு பரஸ்பரம் உதவிக்கொள்ளக்கூடிய துறைகள் பல உண்டு இவற்றை வகுத்து ஏற்பாடான முறையில் ஒத்துழைப்பு பெருக இக்கமிஷன் தக்க திட்டங்கள் வகுக்கக்கூடும். இப்பிராந்தியத்தில் இயற்கை வளங்களுக்கு குறைவில்லையாயினும், இவற்றைத் துரிதமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நவீன சாதனங்கள் போதியளவில்லை. விவசாய வளர்ச்சிக்கும், தொழில் பெருக்குக்கும் தேவையான இயந்திரங்களும், தொழிலறிவு பெற்ற நிபுணர்களும் நமக்குப் பெருவாரியாகத் தேவை. இவ்வினங்களில் அமெரிக்கா போன்ற நாடுகள் நமக்கு விசேஷமாக உதவக்கூடிய நிலையிலிருந்து வருகின்றன. நமது நலத்தைக்கருதி அவை இந்த உதவியைச் செய்யவேண்டுமென்பது மட்டுமில்லை. தங்கள் சொந்த க்ஷேமத்தை முன்னிட்டே அவை இவ்வாறு உதவியாகவேண்டும் என்பதையும் பண்டிதநேரு உணர்த்தியிருக்கிறார். ஏனெனில் தற்போதைய நிலையில் எந்த தேசமும் முற்றிலும் தனித்து நிற்பது சாத்தியமன்று. உலகில் எந்தப்பாகத்திலும் ஏற்படும் ஒரு நன்மையோ, தீமையோ மற்ற பாகங்களையும் பாதித்தே தீரும். எனவே ஆசியப் பிராந்தியத்தில்பொருளாதார கோளாறு முற்றவிடப்படுமாயின், அக்கோளாறு அடுத்தபடியாக மற்ற கண்டங்களுக்கும் பரவியே தீரும்.

பொருளாதார அடிமைத்தனத்தில் கொண்டுபோய் விடக்கூடிய எத்தகைய வெளி உதவியையும் ஆசியநாடுகள் ஏற்கத் தயாராயில்லையென்பதையும் பண்டித நேரு தெளிவாக்கிவிட்டார். விபரீதமான நிபந்தனையெதுவும் விதிக்காமலேயே ஐரோப்பிய நாடுகளுக்குத் தாங்கள் உதவ முன் வந்திருப்பதாக அமெரிக்கர் பறைசாற்றி வருகின்றனர். அதே முறையில் ஆசிய நாடுகளுக்கும் உதவ அவர்கள் தயங்கக்காரணமில்லை. இறுதியாக இவ்விஷயத்தில் அமெரிக்கர் எவ்வாறு முடிவுசெய்வரென்பது நமக்குத் தெரியாது. அவசியமானால் தனது சொந்த சாதனங்களைக்கொண்டே ஆசியா பொருளாதார கதிமோட்சம் பெறத்தயாராகவேண்டும். வெளியுதவியற்ற நிலைமையில் நமது நோக்கம் ஈடேற இன்னும் சிறிது அதிகமான காலமாகலாம். ஆனால் அதற்காக நாம் வியாகூலமடையத் தேவையில்லை. எனினும் இப்பிராந்தியம் கூடியவரை துரிதமான முன்னேற்றம் அடைவதற்கான திட்டங்கள் தற்போது கூடியுள்ள கமிஷனது முயற்சியின் மூலம் உருவாகுமென்று எதிர்பார்ப்போம்.



மகாநாட்டை பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு துவக்கிவைக்கிறார், சென்னை கவர்னர் வலது கோடியில் இருக்கிறார்.



உதகையில் ஆசிய கீழ்க்கோடி நாடுகள் பொருளாதாரக் கமிஷன் மகாநாடு நடக்கும் அரன்மூர் மாளிகையைச் சுற்றியுள்ள ரமணீயமான தோட்டம்.



நாமொன்று நினைக்க —.

ய. மஹாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ.பி.எல்.

மணி ஊருக்குப் போவதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. மணி அடித்ததும் டிக்கெட்டு ஜன்னலுக்கு ஜனங்கள் ஓடி நெரிவதும், டிக்கட்டுத் தேதி அடிக்கும் மிஷின் தபக் தபக் என்று சப்தம் செய்யத் துவக்கியதும் எல்லாம் அவருக்கு சொப்பனம் போலிருந்தது. நாகு சகுனத் தடைசெய்ததை நினைத்துப்பல்லை நெரித்துக்கொண்டார். ஸரஸாவின் கல்யாணமென்றால் அதிர்ஷ்டம் இப்படி இருக்கிறதே என்று பெருமூச்சுவிட்டார். அய்யாப் பயல் கொடுத்த கடிதம் விஷமமான கடிதமாய்த்தானிருக்க வேண்டுமென்று நினைக்கும்போது அவருக்கு எரிச்சலாய் வந்தது. ஏமாற்றும் தொழிலுள்ளவர்களின் ஆடம்பரத்தில்தான் மயங்கிவிட்டதில் தன்னை வெறுத்துக் கொண்டார். மணியின் மனது ஒரு பெரிய ரயில்வே ஜங்ஷனைப் போலாயிற்று. அதில் சிந்தனைகள் கொதிப்புடனும், வேகத்துடனும் படபடப்புடனும் பல பக்கங்களில் ஓடின. அவைகளில் புகைபடர்ந்து இருள் பெருகியது. ரயில் புறப்பட மணி அடித்ததையும் கார்டு ஊதலையும் கேட்டு மணி விழித்துக்கொண்டார். தான் ஏகாகியாயிருப்பதை யுணர்ந்தார். ஜனங்கள் அவரவர்கள் ஜோலியைப் பார்த்துக்கொண்டார்கள். போலீஸ்காரன் திருடர்களைத் தேடப் போயிருப்பதாய் மணி நினைத்துக்கொண்டார். ஆனால் அவரிடம் மறுபடி போலீஸ்காரர் அணுகவில்லை. ரயில் ஸ்டேஷனில் அஜாக்கிரதையாயிருந்தால் சாமான்கள் கெட்டுப் போவது சகஜம்தானே? போலீஸ்காரர்கள் என்ன செய்வார்கள்? தன் துக்கத்தைத்தானே சமாதானப் படுத்திக்கொண்டு, தன் நஷ்டத்தைத்தானே பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். துக்கத்தையும் நஷ்டத்தையும் ஒருவரும் பங்கு போட்டுக்கொள்ள வரமாட்டார்கள் என்று மணி தீர்மானித்துக் கொண்டு வீட்டிற்கு ஒரு வண்டி பேசி அதில் படுக்கையை எடுத்து வைத்துவிட்டு ஏறி உட்கார்ந்தார். மணி வீடுசேர்ந்து கதவைத்தட்டி உறக்கக் கூவின பிறகு நாகு தூக்கி வாரிப்போட்டால்போல் எழுந்து ஓடி வந்து கதவைத்திறந்தாள். அவளுக்குத் தூக்கக்கலக்கம் ஒரு பக்கம் அதிர்ச்சி ஒரு பக்கம் மணியின் கைகால்கள் முன்போல் இருக்கின்றனவா என்று முதலில் கவனித்துத் திருப்தி செய்து கொண்டாள். ஜுரம் தலைவலி ஏதாவது வந்திருக்குமோ என்று நிதானிக்கலானாள். மணி வண்டிக்காரனை அனுப்பும்வரை கேள்வி கேட்காதிருப்பது நாகுவுக்கு முன்போல் நிற்பதுபோலிருந்தது. ரயில் தவறியிருக்க நியாயமில்லை. ஆனால் டிக்கட் கிடைத்திருக்காது என்று முடிவு செய்து கொண்டாள். அவராகச் சொல்லும் முன், தான் எப்படிக் கேட்பது என்று தயங்கினாள். தான் போகவேண்டாம் என்று தடுத்ததைக் குறித்துக் குற்றம் கூறப்படலாம் என்று அவளுக்கு ஞாபகம் வந்தது. மணி நாகுவின் முகத்தை நேராகப் பார்க்கவேயில்லை தானே குனிந்து படுக்கையைத்தூக்கி உள்ளே எடுத்து வந்தார். நாகு பல சந்தேகங்களால் கலங்கிய மனதுடன் பயமும், தடதடப்புமுள்ள ஹீனக்குரலில்—''சாப்பிடுகிறீர்களா?' ''பால்கூட வைக்கவில்லைய! மோர்குத்தி விட்டேன்'' என்று கேட்டுவிட்டு தீபாவளியில் இரட்டை வெடிக்கு நெருப்பு வைத்துவிட்டு, அது வெடித்துச்சுழன்று நெருப்பை பக்கக்கிக்கொண்டு ஆகாசத்தில் எழுந்து பாய்வதை எதிர்பார்த்து எட்டிப் போய் நிற்கும் சிறுமியைப்போல், நடுங்கிக்கொண்டு வழியை விட்டு நகர்ந்து நின்றாள். ''தீர்த்தம் கொண்டுவா போதும்'' என்று சொல்லிவிட்டு மணி ஊஞ்சலில் படுக்கையை விரித்தார். கூடத்தில் ஒன்றுமறியாத பேதையாய்த் தூங்கும் ஸரஸாவை ஒரு முறை பார்த்துப் பெருமூச்சு விட்டார். தீர்த்தத்தைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு நாகு ''ஏன் வந்து விட்டீர்கள்?'' என்று மெதுவாய் வினவினாள்.

மணி ஒரு பொய்ச்சிரிப்புச்சிரித்துக்கொண்டு, ''அந்தப் பயலை ரயிலில் பார்த்து விட்டேன்'' என்றார்.

''யாரை?''

''அந்த ஸீதாராமன் பயலைத் தான்.'

'அவன் எங்கேயிருந்து எங்கே வந்தான்?'

''பட்டணத்திலிருந்து அவன் வருகிறான். நான் பட்டணம் போகத்தயாராகவிருக்கிறேன். அவன் இறங்கினதைப் பார்த்து விட்டு என் பிரயாணத்தை நிறுத்திக்கொண்டேன். இரண்டு ரயில்களும் இன்று இங்கேதான் மீட்டிங்கு ஆச்சு.''

''ஸீதாராமனைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தீர்களா?''

''எல்லாம் பேசிக்கொண்டிருந்தேன் 'நான் என்ன, மாமா சொல்லப்போகிறேன். எல்லாம் அப்பா, அம்மா சொன்னால் சரி தான்' என்கிறான் பயல். 'சரி காலையில் பார்த்துக்கொள்ளலா

என்று அவனை விடைகொடுத்து அனுப்பிவிட்டு நான் ஒரு வண்டியைப் பிடித்துக்கொண்டு வீடு வந்துசேர்ந்தேன். (சிரித்துக்கொண்டு) நீதான் நான்போகும் போதே அஸ்து என்று—''

''எனக்குத்தெரியும், சொல்லிக் காண்பிப்பீர்கள் என்று. ஆனால் இப்போ என்ன வந்து விட்டது? கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது. பத்து, இருபது பணச் செலவில்லாமலே மப்பிள்ளை வந்துவிட்டான்''

மணி—(அதிகம் சிரித்துக்கொண்டு) பணம் மிச்சப்பட்டது உண்மைதான். மாப்பிள்ளை வந்துவிட்டானென்று அதற்குள் அல்ப சந்தோஷப்படாதே. அது கிடக்கட்டும். வெற்றிலை சீவல்தட்டைக் கொண்டு வா.''

நாகு, தட்டைக்கொண்டு வந்து வைத்துவிட்டுச் சுண்ணும்பு இல்லாததைப் பார்த்து ''உள்ளே இருந்து சுண்ணும்பு எடுத்துவர வேணும், கொஞ்சம் டார்ச்சு லைட்டைக் கொடுங்களேன்'' என்று கையை நீட்டினாள்.

மணியின் முகம் சரேலென்று இருள்மண்டியது. ''கை விளக்கை எடுத்துகொண்டு போயேன்'' என்றார் கவலை தோய்ந்த குரலில். அவருடைய வெறித்த கண்கள் மனக்குழப்பத்தை எடுத்துரைத்தன. நாகு சந்தேகப்படலானாள். ''கை விளக்கில் விளும்பைப்பிடிக்க எண்ணெய் விட்டிருக்கிறேன். எடுத்தால் எண்ணெய் வழியும் டார்ச்சையே கொடுங்கள்:—ஏன்? டார்ச்சு எங்கே?''

''நான் எடுத்துப்போன ஞாபகமாகவில்லை. அதைத் தேடுவதைவிட வெற்றிலை போட்டுக்கொள்ளாமல் இருந்து விடலாம்.'' என்றார் மணி, அலுத்துக்கொண்டவர்போல்.

''ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் டார்ச்சை எடுத்துப் போனது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். எங்கே டார்ச்சு?''

மணி மனோதிடமிழந்தார்—''டார்ச்சு கெட்டுப்போய் விட்டது.''

கெட்டா போய்விட்டது? எங்கேயாவது கீழே விழுந்து விட்டதா?''

''என்னை அறியாமலா விழுந்துவிடும்?''

''மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டீர்களா?''

''நானா மறப்பவன்!''

''பின்னே எங்கே அது? உடைந்து போய்விட்டதா?''

''நான் அஜாக்கிரதையாய் இருந்தாலல்லவா உடையும்?''

''பல்பு பியூஸாகிவிட்டதோ?''

''வாங்கி எட்டு வருஷமாகிறதே ஒருதரமாவது பல்பு மாற்றியிருக்கிறேனா?''

''என்ன நடந்தது பின்னே?''

''திருட்டுப் போய்விட்டது''

நாகு திகைத்துப் போனாள். ''அது மட்டும்தான் போச்சா? பணம் காசும் போய்விட்டதா?'' என்றெல்லாம் கேட்கவாரம்பித்தாள். மணி ஆதியோடந்தமாய் விருத்தாந்தங்களை வருணித்தார்-நாகு ஊக்கத்துடன் கேட்டு வந்தாள்.

''அப்போ, ஸீதாராமனைப் பார்த்தது பொய் தானே''

''காலையில் பேசிக் கொள்ளலாம் என்பதற்காக ஒரு பொய்யைப் பிரயோகித்தேன், அது பயன்படவில்லை'' என்றார் மணி அசட்டுச் சிரிப்புடன்.

''அந்த லெட்டரைப் போடவில்லையே?''

''இல்லை. நாளைப் போஸ்டில் போட்டு விடலாமென்று உத்தேசம்.''

''அந்தலெட்டர் எங்கேயிருக்கிறது''

''சட்டைப் பையில்—ஏன்?''

''அதைப் பிரித்துப் பார்க்க வேணும். நம்ம விஷயமாய்த்தான் எழுதியிருப்பார். அதைப்

பார்க்காமல் அனுப்பவே கூடாது. ஈச்வரன்தான் இந்தச் சதியை உடைத்தெறிய நமக்குஉத்திரவிட்டிருக்கிறார். டார்ச்சு போனதற்குப் பதிலாய் இந்த லெட்டர் உங்கள் கையில் சிக்கியது எனக்கு துக்கமாகவேயில்லை. அவாள் சுபாவமே அப்படித்தான். முன்னே ஒன்று, பின்னே ஒன்று. நான் சொல்லுகிறேன் என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். அதனால் தான் என்ன சம்பாதித்தாலும் அவர்களுக்கு ஒட்டவில்லை.''

மணி, "காலையில் பார்த்துக் கொள்ளலாம்'' என்று ஒத்திப் போடப் பார்த்தார்.

நாகு, "அதைப் பார்க்காத போனால் எனக்குத் தூக்கம் வராது'' என்று பிடிவாதம் பிடித்தான்.

"இதற்குத்தான் நான் முதலிலேயே உன்னை வேறு வழியில் சமாதானம் செய்ய நினைத்தேன். உண்மையைச்சொன்னால் இப்படி வந்து முடியும் என்று எனக்குத் தெரியும்.'

அந்தப் பாவம் என்னுடையதாயிருக்கட்டும். கடிதத்தைக் கொடுங்கள். நான் உடைத்துப் பார்க்கிறேன். உங்களுக்கு வேண்டாமென்றால் நான் விஷயத்தைச் சொல்லவில்லை. நான் அதைப்பார்க்கா விட்டால் இரவு தூங்கமாட்டேன்.''

மணி எழுந்திருந்து கோட்டுப் பாக்கெட்டிலிருந்து அந்த லெட்டரை எடுத்து கவரை மெள்ளத் திறக்கப்பார்த்து முடியாததால் கிழித்துவிட்டு லிகிதத்தை வெளியில் எடுத்து வாசிக்கலானார்.

உ

ஸ்ரீசிவ: சரணம்

சியாமளாம்பரபுரம்
சித்திரபானு மாசி 17
ஸ்திர வாரம்

உபய க்ஷேமம்.

சி. ஸீதாராமனுக்கு அநேக வேதோக்த ஆசீர்வாதம். இவ்விடம் எல்லோரும் க்ஷேமம். அவ்விடத்தில் மா ா ஸ்ரீ ஐயர் அவர்கள் குடும்ப க்ஷேமத்திற்கும், உன் க்ஷேமத்திற்கும் எழுதவும். உன்னிடமிருந்து பலகாலமாய்க் கடிதம் வரவில்லை, ஏன்? அடிக்கடி கடிதம் வராதபோனால் பல சிந்தனைகளால் மனம் தளர்ந்து போகிறது. ஸ்ரீ அய்யர் அவர்களின் க்ருபா விலாஸத்தால் உனக்கு மஹத்தான ச்ரேயஸ் உண்டாகப்போகிறது என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. பகவத் சங்கல்பம் அனுகூலமாயிருப்பதற்கு ஸ்ரீ ஐயர் அவர்கள் உன்னிடம் வைத்திருக்கும் அவ்யாஜமான அன்பே அத்தாக்ஷியாகும். அவர்களிடம் வினயமாய் நடந்துகொண்டுநன்றாய்ப்படி. எங்களுக்கு (முக்கியமாய் உன் தாயாருக்கு) வர வர தேக சௌக்கியம் குறைவாயிருந்து வருகிறபடியால் நீ குடும்பபாரத்தை ஏற்றுக் கொள்ளக்கூடியவனாக ஆக வேண்டுமென்ற பிரார்த்தனை கொஞ்ச காலமாயிருந்து வருகிறது. எல்லாவற்றிற்கும் ஸ்ரீ ஐயரவர்களேபொறுப்பாளி. உன்னை ஒரு தகுந்த உத்தியோகத்தில் ஸ்தாபித்து, நல்ல விவாஹத்தைச் செய்து வைத்து இந்த ஏழைக் குடும்பத்தை வறுமையிலிருந்தும், கஷ்டத்திலிருந்தும் அவர்களே உத்தாரணம் செய்து மஹோபகாரம் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களின் அரோக திருடகாத்திரத்தையும், மேல் மேல் ஐச்வரியாபிவிருத்தியையும், குடும்ப க்ஷேமத்தையும் நான் பிரதி தினமும் சியாமளாம்பா ஸந்நிதியில் பிரார்த்தித்து வருகிறேன். அவர்கள் க்ஷேமம் நம்முடைய க்ஷேமம். அவர்களின் சௌக்கியம் நம்முடைய பாக்கியம். அவர்களின் கருணை நம் ஜீவாதாரம். நமக்கு வேறே பந்துக்களில்லை, ஆப்தர்களில்லை. சஹாயம் கிடையாது. பலமில்லை ஸம்பத்து இல்லை. தீன அநாதரக்ஷகனை அந்தப் பரமேச்வரன்தான் ஸ்ரீ அய்யர் அவர்களின் ஸ்வரூபமாக இருந்துகொண்டு நம் குடும்பத்திற்கு அப்யப் பிரதானம் செய்திருக்கிறார். ஆகையால் ஸ்ரீ அய்யரவர்களிடம் பக்தியுடனும், விச்வாசத்துடனும் கிருதக்ஞதையுடனும் நடந்துகொள்வதுடன் உன் வருங்கால சிரேயஸ்ஸுக்கு எவ்விதத்திலும் அவர்களின் கோட்பாட்டின்படிக்கும், ஹிதோபதேசத்தின் படிக்கும், ஆலோசனைப்படிக்கும் நடந்து கொள். இதுவரை நம்மிடம் உதாசீனமாயிருந்த சில ஸந்நிஹித பந்துக்கள் இப்போது நீ முன்னுக்கு வரக்கூடிய நிலைமையை உத்தேசித்து சில பிளான்கள் போட்டுக்கொண்டு உன்னைத் தாக்க வருவார்கள். அவர்களின் பூர்வ சரித்திரங்களை மறவாமல், அவர்களுக்குத் தக்கபடி பதில் கொடுத்து அனுப்பிவிடு. அவர்கள் அன்பும், ஆதரவும் இன்பமான மொழிகளும் தற்காலிகமானவை என்றும், சுய காரிய சாமர்த்தியம் என்றும் தெரிந்து கொள். மேலே ஏறுகிறவன் மேலேதான் பார்க்கவேண்டும். கீழே நோக்கக் கூடாது. படிப்பிலும் சரி, உத்தியோகத்திலும் சரி, நட்பு விவாஹம் முதலிய சம்பந்தங்களிலும் சரி, முன்னேற நினைப்பவன் கீழே இழுக்கப்படுவதற்கு இடங்கொடுக்கக்கூடாது. ஸ்ரீ ஐயர் அவர்களைக்கொண்டே இக்கடிதத்துடன்—(ஆனால் இக்கடிதம் வருகிறதை அறியாமல்) ஒரே ரயிலில் பிரயாணம் செய்து உன்னிடம் நைச்சியம் பேச வரும் ஒண்ணு நெம்பர் சகுனி மாமாவுககுப் பதில் சொல்லச் செய்து திருப்பிவிடு. நீ ஒன்றும் பட்டுக்கொள்ள வேண்டாம். உனக்கு அழகும் குலமும், ஐச்வரியமும் உள்ள பெண்கள் எவ்வளவோ வருகின்றன. ஆனால் நான் ஒன்றையும் மேல்போட்டுக்கொள்ளாததற்குக் காரணம் எல்லாம் ஸ்ரீ ஐயர் அவர்களே பார்த்துச் செய்யட்டும் என்றஎண்ணம்தான். உன் மாமா பெண்ணை நீ பார்த்திருக்கிறாய். இப்போது வயதானதற்காகக் காக்கை கிளியாகி விடாது. ஆகையால் நீ என்ன அபிப்பிராயப்படுவாய் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. மேலும் கிட்டினபந்துக்களிடம் சம்பந்தம் செய்வது எப்போதும் சுகமில்லை. "தாக்ஷிண்யம் தனநாசனம்'' நீ புத்திசாலியாகையால் அதிகம் சொல்லவேண்டியதில்லை. மணி மாமாவை ஸ்ரீ வெங்கிடசுப்பையரிடம் தள்ளிவிடு. அவன் வாய்ச் சவடால்களை அவர்களிடம் விஸ்தரிக்க முடியாது. அவன் வலையில் சிக்கிவிடாதே. வார்த்தைதான் தேன்! காரியம் குதிரைக்கொம்புதான். உஷார். நாளைக்கே நடந்த விஷயங்களுக்கு எனக்கு விவரமாய் பதில் போடு. ஸ்ரீ ஐயர்வாளிடத்தில் என் வணக்கத்தைத் தெரிவி. சி. ராமனாதனுக்கு என் ஆசீர்வாதத்தை தெரியப்படுத்து.



"...மணி ஒரு பொய்ச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு, அந்தப் பயலை ரயிலில் பார்த்துவிட்டேன்" என்றார்.

குழந்தை காந்திமதியை உன் அம்மா விசாரித்ததாய்ச்சொல்லு. கிருஹ லக்ஷ்மியாய் விளங்கும் ஸ்ரீமதி சங்கரி அம்மாளுக்குச் சகல மனோ அபீஷ்டங்களும் ஸித்திக்க வேண்டுமென்று ஸ்ரீசியாமளாம்பா ஸந்நிதியில் நான் பிரதிதினமும் பிரார்த்தித்துக்கொண்டிருப்பதாய்த் தெரிவி.

அவசியம் உடனே மாமா வந்து போன விருத்தாந்தங்களுக்கு விவரமாய் உன் பதில் எதிர்பார்க்கிறேன். நேற்று வெள்ளிக்கிழமை அம்பாளுக்கு அர்ச்சனை பண்ணின குங்குமம் இத்துடன் வைத்திருக்கிறேன். இதை அம்மாமியிடம் கொடு.

இப்படிக்கு, ஆசிர்வாதம்.

சேஷு சாஸ்திரி

கடிதம் வாசித்து முடிந்ததும் மணி நாகுவைப் பார்த்தார். நாகு மணியைப் பார்த்தான். திருஷ்டி தீக்ஷையில் ஆசாரிய சிஷ்யர்களின் பரஸ்பரப் பார்வைபோன்ற அந்தப் பார்வையில் இரு ஆத்மாக்களும் ஒன்றுக்கொன்று கலந்து சம நிலைமை யடைந்து ஒரே வழியாய் பிரவகிப்பதுபோலிருந்தது. கடிதத்தின் பல சாராம்சங்கள் ஒருமித்த அவர்கள் மனதில் அலைகள்போல் கொந்தளித்தன. அந்தராத்மாவில் துக்கமும், ஏமாற்றமும், வெறுப்பும், ஆச்சர்யமும், பரிகாசமும் அவர்களின் முகங்களில் பிரதிபலித்தன. நாகு முதலில் பேசினாள்.

"ஏன்னா! இந்தக் கடிதத்தை வாசிக்காமல் எப்படி தூங்குவது? ஏதோ விபரீதமாய்த்தான் எழுதியிருப்பார் என்ற வரையில்தான் எதிர்பார்த்தோம். இவ்வளவு தூரம் கேவலமாய் இருக்குமென்று நினைக்கவில்லை. பெரிய மஹாபாரதமாயல்லவா இருக்கிறது."

"சாஸ்திரிகள் புராணம் படித்தவரோல்லியோ?"

"மனுஷ்யாளுடைய எண்ணம் என்னவிதமாயிருக்கிறது என்று எங்கே தெரிகிறது?"

"இப்போ தெரிகிறதோ இல்லையோ?"

இத்தாலியின் புதிய மந்திரி சபையிலிருப்பவர்கள்தான் படத்திலிருப்பவர்கள். இடதுபுறத்திலிருந்து முதலில் நிற்பவரே உதவிப் பிரதம மந்திரி அடிலியோ பிகியோனி; நடுவே நிற்பவர் பிரதம மந்திரி டி காஸ்பரி.

"நன்றாய் வெட்டவெளிச்சமாய்—இனிமேல் முகாலோகனம் செய்யவா?"

மனுஷ்யன் இவ்வளவு அல்பனாயிருப்பான் என்று நான் நினைக்கவில்லை."

"மனுஷி மட்டும்? உங்கள் தங்கையை சொல்வதானால் உங்களுக்கு மனசாகாது."

"எல்லாம் அப்படித்தான்—சரியான ஜோடி. பயல் மட்டும் அப்படி இல்லை என்பது நிச்சயம்."

"எல்லாம் குட்டையில் ஊறின மட்டைதானே?"

"அப்படிச்சொல்லாதே, அவன் மேல்பட்ட குணசாலி. இவர் என்றைக்குமே பணப்பெருமையே பெருமை என்று கூத்தாடும் சுபாவமுள்ளவர் தான்—தெரியாதா என்ன? முட்டாள்—ஆகாசப்பந்தல் போடுகிறான். பணக்காரர்களை ஸ்தோத்திரப் பாடத்தினால் மந்திரம் போட்டு மயக்கிவிடலாமென்று நினைக்கிறான். காற்றைப் பிடித்துத் தலைப்பில் முடித்துக்கொள்ள ஆசைப்படுகிறான்—கொக்கின் தலையில வெண்ணையை வைத்து அதைப் பிடிக்கும் யோசனையைச் செய்கிறான். கடைசியில் தெரியப் போகிறது பணக்காரர்களின் தன்மை."

"அவர் கொக்கைத்தான் பிடிக்கட்டும்; காக்கையைத்தான் பிடிக்கட்டும்—நமக்கு அவர்கள் எக்கேடு கெட்டுப்போனால் என்ன—நம்மை எவ்வளவு இழிவாக நினைக்கிறார்களென்பது தெரிந்துவிட்டது. நாளைக்கே புறப்பட்டு எங்கேயாவது போய் நாலு ஜாதகங்களை வாங்கிவந்து பார்த்து குழந்தைக்கு ஒரு முகூர்த்தத்தை வைத்து அவர்களுக்கு மூஞ்சியில் அடித்தாற்போல் பத்திரிகையைப் போடுங்கள். அவர்கள் பேச்சை இனி விட்டொழியுங்கள். அர்த்த ராத்திரி ஆகப்போகிறது. எல்லாவற்றையும் மறந்துவிட்டுப் படுத்துத் தூங்குங்கள்.

(முதல் பாகம் முற்றிற்று.)

(தொடரும்)

உங்கள் கால பலன்



மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

சென்ற மாத பலன்களுடன் ஒத்திட்டுப் பார்க்கையில் மேஷ ராசிக்காரர்களுக்கு இம்மாதம் பிரகாசமாகத் தோன்றுகிறது. மனதில் பெரும் பளுவாக இருந்தபோதிலும், இந்த ராசிக்காரர்களுடைய விவகாரங்களெல்லாம் நன்கு உருப்பட்டு வரும். பண விஷயமாகக் கிட்டிய பந்துக்களுடன் சற்று கசப்பேற்படும். தீராமல் நின்றுபோன அநேகம் காரியங்கள் இப்போது முடிவு பெறும். குடும்ப சுகம் விரைவில் அபிவிருத்தி பெறும். உத்தியோகத்தில் விசேஷமான கவலைகள் ஏற்படும். ஏதாவது இத்துறையில் மாறுதலை அடைய மனம் விரும்பும். மாதக் கடைசியில் அவ்விருப்பம் பூர்த்தியாகலாம். இந்தராசிக்காரருடைய மேலதிகாரிக்கே ஏதேனும் இடம் விட்டு இடம் மாறவோ அல்லது வேறு மாறுதலோ ஏற்படலாம். கிட்டிய பந்துக்களுக்குக் குடும்பத்தில் விவாகம் நடக்கலாம். ஏதாவது பிரயாணம் ஒன்றும் சித்திக்கக்கூடும். இரண்டாம் பகுதியைவிட இம்மாத முதல் பகுதி ரொம்ப விசேஷம். ஜூலைமாதம் 5-ந்தேதி வாக்கில் லக்கினாதிபதி செவ்வாய் 6-வது இடத்திற்கு வருவதால் ஆகாரக்கோளாறினாலோ அல்லது சாப்பாட்டைச் சரிவரக்கட்டுப்படுத்த முடியாமையினாலோ ஆரோக்கியம் பாதிக்கப்படும். பக்கத்திலுள்ளவர்களிடம் தகராறு வைத்துக்கொள்ளக்கூடாது.

வியாபாரிகளுக்கு இந்த சமயம் ஏற்றதாகும். அவர்களுடைய க[illegible]தப் போக்குவரத்தெல்லாம் நன்மை பயக்கும். இம்மாதக் கடைசி வாரம் எதிர்பார்க்கும் பலன்களுக்குச் சாதகமாகயிருக்கும்.

ஜூன் 15, 16, 17, 26, 30, ஜூலை 3, 5, 9, 13 தேதிகள் இவர்களுக்குச் சிறப்பானவை.

விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

8-வது இடத்தில் குரு இருந்தபோதிலும் விருஷப ராசிக்காரர்களுக்கு இம்மாதம் சுமாராக இருக்கும். ஆரம்பத்தில் பண நெருக்கடி கடுமையாகவிருந்து திடீரென்று வசதியும் பிறக்கும். உத்தியோகத்தில்செய்யும் வேலை, ஊதியம் இரண்டிலும் அபிவிருத்தி ஏற்படலாம். அபிப்பிராயபேதமிருந்தபோதிலும் மேலதிகாரியின் பாராட்டுக்குப் பாத்திரமாகச் செய்யும் சேவை சிறப்படையும். செவ்வாய் தசை உடையவர்களானால் அவர்களுக்கு இருப்பிடமாற்றம் உண்டென்று சொல்லலாம். முக்கியமாகப் பிற்பகுதியில் செலவு ரொம்பக் கடுமையாயிருக்கும். எதிர்பாராத அதிருஷ்டம் ஏதேனும் ஏற்படக்கூடும். வியாபாரிகளுக்கு நல்ல வருமானமிருக்கும். ரொம்ப தாமதப்பட்டுப் போன வியாபாரம் திடீரென்று தீர்ந்துவிடும்கட்டமிது. கூட்டாகச் செய்யும் வியாபாரத்தில் ஏதாவது மாறுதலேற்படக்கூடும்.

முதல் பகுதி ஹேஷ்யத்துடன் காரியங்களை செய்வதற்கும், புதிதாகக் கூட்டாளியாகச் சேர்ந்து வியாபாரம் செய்வதற்கும் வசதியைத்தரும். இந்த முதல் பகுதியில் மனைவி அல்லது புருஷனின் தேக சுகம் பாதிக்கப்படும். பண விஷயமாகக் குடும்பத்தாரோடு சச்சரவுகள் கூடாது. குழந்தைகளால் திருப்தி ஏற்படும். தசாநாதன் குருவாகவோ அல்லது புதனாகவோ இருக்கும்பட்சத்தில் புத்திரர்களில் சிலர் பரீட்சைகளில் அமோகமாக வெற்றிபெறுவர். கல்யாணமாகாமலிருக்கும் விருஷப ராசிக்காரர்களுக்கு இந்த சமயத்தில் மணம் நடக்கும். ஆனால் ஜூலைமாதம் 5-ந்தேதிக்கு முன்னதாக இத்துறையில் சகல ஏற்பாடுகளையும் செய்துகொள்வது நலம். இல்லையானால் இருசாரரில் யாரேனும் ஒருவரால் ஏமாற்றமேற்படும்.

ஜூன் 15, 23, 26, 30, ஜூலை 5, 9, 13 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரம்.

1948-ம் ஆண்டு ஜூன்மாதம் 15உ முதல் ஜூலை மாதம் 15உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுளது. ராசியைத் தெரிந்து கொள்ள நட்சத்திரங்களும், பாதங்களும் பக்கத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

குடும்ப பாந்தவ்யம், குடும்ப விவகாரங்கள் இவற்றிலிருந்து மிதுன ராசிக்காரர்களுக்கு இம்மாதம் மகிழ்ச்சிகரமான அனுபவங்கள் ஏற்படும். குடும்பத்தில் ஏதாவது ஒரு பரபரப்பிருந்து வரும். சில நாட்களுக்குப்பிறகு தான் இது அடங்கும். கிட்டிய பந்துக்கள் நல்லெண்ணத்தோடு ஒத்துழைப்பார்கள். ஊழியர்களுக்கு, முதலாளிகளிடமிருந்து அனுகூலங்கள் சித்திக்கும். சிலர் கல்யாணம்போன்ற சுப காரியங்களை முன்னிட்டு ரஜாவில் போகநேரும். சுக்கிரன், குரு, புதன் இவர்கள் அடைந்திருக்கும் ஸ்தான விசேஷம் காரணமாக இம்மாதத்தில் பல விவகாரங்கள் நடக்கும். உத்தியோகத்துறையைக் கவனிப்போமாயின், மேற்படிகிரஹங்களின்சேர்க்கை சிறிது காலம் வரை மேலதிகாரியிடம் அபிப்பிராய பேதம் கொள்ள நேருமென்பதைக் குறிக்கும். சகோதரர் விஷயமாக மன நிம்மதியிராது. இதுவரையில் பிரிந்திருந்த கிட்டிய பந்து இம்மாதம் இந்த ராசிக்காரர்களுடன் சேர்ந்து வாழலாம். தசாபுக்தி நாதன்கள் அனுகூலகரமாகவிருக்கும்பட்சத்தில் மனைவி இம்மாதத்தில் கருத்தறிக்க ஹேதுவுண்டு. இதனால் சிறிது கவலைகளும் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு ஹேஷ்யங்களில் நல்ல பயன் கிட்டும். புதிய வாடிக்கைக்காரர்களின் ஆதரவுமிருக்கும். கூட்டு வியாபாரம் செழிப்பாக நடக்கும். உறவினர், நண்பர்கள் இவர்களுடன் தகராறு வைத்துக்கொள்ள வேண்டாம். இரண்டாம் பகுதியில் வயிற்றுக் கோளாறு ஏற்படும்.

ஜூன் 15, 26, 30, ஜூலை 5, 7, 15 தேதிகள் இவர்களுக்கு வசதி தரும் தினங்கள்.

கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

கிரஹங்களின் போக்கு இந்த ராசிக்காரர்களுக்கு மகிழ்ச்சிகரமாயில்லை. எனவே இம்மாதமுதல் பகுதியில் சுலபமாக எதுவும் நடக்காது; செய்யமுடியாது. இரண்டாம் பகுதியில் பொதுவாக அபிவிருத்திகரமாயிருக்கும். ஏற்கனவே யிருந்துவந்த தடைகள் விலகி முன்னேற்றமேற்படும். பணவிஷயங்களிலும் வசதிகள் உண்டாகும். இரண்டாம் பகுதியில்தான் குடும்பத்தில் சந்தோஷமேற்படும். சிறிது காலத்துக்கு மனைவி அல்லது புருஷனின் தேகாரோக்கியம் பாதிக்கப்படும். வெறுப்பேற்படும் வகையில் உத்தியோகக்கவலைகள் இருந்துவரும். கடன் கொடுப்பதோ, வாங்குவதோ கூடாது.

இரண்டாம் பகுதியில் ஓரளவு இதில் மாறுதலேற்படலாம். மாற்றமோ, அல்லது பொறுப்பு கூடுதலோ ஏற்படும். வியாபாரிகளுக்கு ஹேஷ்யங்களால் திருப்தி ஏற்படாது. இவர்கள் சிறிது காலம் பொறுத்திருப்பது நல்லது. ஏனெனில் புதிய வியாபார மார்க்கம் ஒன்று ஏற்பட்டு அது லாபத்தைத்தருவதாக விளங்கும் காலம் வரவிருக்கிறது. அதுவரை வியாபாரத்தில் போட்ட முதல் முடக்கம் காரணமாக மந்தமாகவிருக்கும். ஜூன் கடைசி வாரத்தில் பண விஷயத்தில் யாரேனும் ஒருவர் உதவி செய்ய முன் வரலாம். இந்த மாதம் ஸ்திரீகளுடையதென்று சொல்லவேண்டும். ஸ்திரீகளுக்குத்தான் இந்த கட்டம் ரொம்ப சிலாக்யமாயிருக்கும். ஆயினும் ஸ்திரீயோடு ஒத்துழைப்பதன்மூலம் புருஷனும் வெற்றி பெற முடியும்.

ஜூன் 16, 26, 30, ஜூலை 5, 9, 13 தேகள் இவர்களுக்கு உயர்தர நாட்கள்.

ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

ஸிம்மராசிக்காரர்களுக்கு இது சுமாரான அதிருஷ்டத்தைத் தரும் மாதமே. இருப்பிடம், அல்லது சொத்து ஆகியவற்றில் திடீரென்று மாறுதலேற்படலாம். மன அமைதியிழக்காமல் நிதானத்தோடு இருக்கவேண்டும். ஏற்கனவேயே தேகத்தில் உஷ்ணம் அதிகரித்திருப்பதால் கோடைக்கொப்புளங்களும், சருமக்கோளாறுகளும் ஏற்படும். 12-வது இடத்திலுள்ள சனி கடைசியான கட்டத்தில் இருப்பதால் செலவு கடுமையாகும்; சேவகர்களால் கஷ்டங்கள் விளையும். மனைவி, அல்லது புருஷனின் தேகநிலைமை பற்றிக் கவலைப்படும்படியிருக்கும். அநேகருக்குக் கடன்கள் தீரும்: புதிய பொறுப்புடன் புதிய வாழ்வு ஆரம்பமாகும். 11-வது இடத்திலுள்ள கிரஹங்கள் காரணமாக பணத்துக்கும், பழக்கத்துக்கும் பலவிதமான வசதிகள் ஏற்படும். புதிய நண்பர்கள் ஏற்பட்டு அவர்களால் அனுகூலம் ஏற்படும். உத்தியோகத்தில் பிரத்யேகமான ஆதரவிருக்கும். எதிர்பாராத பண லாபமும் கிட்டும். புதிய தனவந்தர்களைச் சந்திக்கும் பிராப்தமும் உண்டு. ஜூலை இரண்டாம் தேதியிலிருந்து எதிர்பார்க்கும் லாப இனங்களில் தடைகள் ஏற்படும். ஏனெனில் தனாதிபனான புதன் வக்ர

1948-ம் வருஷம் ஜூன் 15-ந்தேதியுள்ள கிரஹ நிலை.

	ராகு		சூரியன் சுக்கிரன் புதன் உரானஸ்
			சனி
			செவ்வாய்
குரு		கேது	சந்திரன் நெப்டியூன்

கதியடைகிறார். நண்பர்கள் சகவாசத்தில் பிரேமை அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தைகள் பிறக்கும்.

ஜூன் 16, 21, 25, ஜூலை 9, 13 தேதிகள் இவர்களுக்கு நல்லவை.

கன்யா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

கன்யா ராசிக்காரர்களுக்கு இம்மாதம் அநேகம் காரியங்கள் நிகழும். முயற்சிகள், உற்சாகமான மனஎழுச்சி ஆகியவையெல்லாம் எதிர்பார்த்தபடி முன் வந்து நிற்கும். இம்மாதத்தில் நிகழும் முக்கிய சம்பவங்கள் எல்லாம் வெளியிடப் பழக்கங்கள், குடும்ப அலுவல்கள், வியாபாரம் அல்லது உத்தியோக காரியங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கும். திடீரென்று அதிக வருமானத்துக்கு இடமேற்படும். உத்தியோகத்தில் ஓரளவு மாறுதலேற்படும். எதிர்பாராத, செலவுகள் திடீர் திடீரென்று ஏற்படுமாயினும் பணவசதிகள் நன்றாகவேயிருக்கும். மேலதிகாரியின் ஆதரவுண்டு. இம்மாதம் ஒரு பிரயாணம் நேரக்கூடும். பிறரோடு விவாதங்களில் ஈடுபடவேண்டாம். ஏனெனில் எந்த விஷயத்தையும் ஆவேச உணர்ச்சியில்லாமல் பரிசீலிக்கத் தோன்றாது. பொறுமையை இழந்துவிட நேரும். குடும்ப சுகம் பாதிக்கப்படும். தேகசுகம் திருப்திகரமாயிராது.

தேகத்தில் உஷ்ணம் ரொம்ப அதிகரித்திருக்கும். வியாபாரிகளுக்கு இம்மாதம் நல்ல லாபம். புதிய வியாபாரத் தொடர்புகள் ஏற்படும். சிப்பந்திகளில் மாறுதல்கள் செய்வதவசியமாயிருக்கும். விபத்துகளில் சிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஜூன் 15, 17, 26, 30, ஜூலை, 5, 7, 9, 13 தேதிகள் இவர்களுக்கு சிரேஷ்டம்.

துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

ஜூன் மாதம் 22-ந்தேதியிலிருந்து குரு 2-வது இடத்துக்கு வருவதால் பண விஷயங்கள் சுலபமாகி சமாளிக்கும்படியான நிலைமை துலாராசிக்காரர்களுக்கு ஏற்படும்.

லக்னாதிபதி 9-வது இடத்தில் பிற கிரஹங்களுடன் இருப்பது ஊழியம் புரியும் இலாகாவில் அதிருஷ்டத்தைத் தரும். மேலதிகாரிகளின் ஆதரவு உண்டாகும். 11-வது இடத்தில் செவ்வாய் இருப்பது எதிர்பாராத செலவை உண்டுபண்ணும். கிட்டிய பந்துவால் கவலையும் ஏற்படும். ஜூலை மாதம் 5-ந்தேதி முதல் செவ்வாய் 12-க்கு வருவதால் பணமுடை ஏற்படும். கவலைகள் உண்டாகும். மனைவி அல்லது புருஷனின் தேக சுகம்பற்றி சற்று கவலைப்படும்படியும் இருக்கும். இந்த ராசிக்காரர்களுடைய நலன்களுக்கு எதிரிடையாகச் சில எதிரிகள் வேலை செய்யலாம். அவர்கள் அனுவசியமாக ஒழுக்கத்தைப் பற்றி குறை கூறித் தூற்றுவார்கள். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமலிருப்பதே நல்லது. அவர்களை எதிர்க்கப்போனால் சொந்த நலனுக்கே கேடுவிளையும். வியாபாரத்தை முன்னிட்டோ அல்லது கல்யாணத்தை உத்தேசித்தோ ஒரு தூரதேசப் பிரயாணம் நேரலாம். சனி 10—வது இடத்தில் இருப்பது சாதகமல்ல. உத்தியோகத்தில் கவலையும் ஏமாற்றமும் ஏற்படும். வியாபாரிகள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அயல்நாட்டு வியாபாரம் அதிக உற்சாகத்தைக் கொடுப்பதாயிருக்கும். பண விஷயங்களில் முன்னதாகக் கவலைகளை உண்டுபண்ணி வந்த போதிலும் முதல் பகுதியில் திடீரென்று லாபம் கிடைக்கும்.

ஜூன் 17, 21, 26, 30 ஜூலை 3 5, 6, 7, 13 தேதிகள் இவர்களுக்கு உகந்தவை.

விருச்சிக ராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

விருச்சிக ராசிக்காரர்களுக்கு 8-வது இடத்திலும், 10-வது இடத்திலும் உள்ள கிரஹங்கள் காரணமாக உத்தியோகத்தைப் பொருத்து விசேஷமாகக் கவலைப் படும்படியிருக்கும். ஊழியம் செய்யும் இலாகாவில் ஆதரவிராது. ஜூன் மாதம் கடைசிவாரத்திலிருந்து குரு 1-வது இடத்துக்கு வருவதால் பண விஷயத்தில் கவலைகளேற்படும். மனது ரொம்ப பாரமாயிருக்கும். எனவே எதையும் தீவிரமாக நினைக்காமல் கொஞ்சகாலத்துக்கு சாத்வீகமாகப்போவது அவசியம். 9—வது இடத்தில் சனி இருப்பதால் மனது எதிலும் வெறுப்புற்று, பற்றில்லாத வாழ்க்கையை மேற்கொள்ளத் தூண்டும். நண்பர்களை நம்புவதைவிட சுயமாகவே மனச்சாட்சியின்படி நடப்பது நல்லது. ஜூலை 5, 6, தேதிகள் உத்தியோகம், குடும்பம், வெளியிடம் ஆகியவற்றில் முக்கியமாக விளங்கும். வியாபாரிகளுக்கு இம்மாதம் அதிகக் கஷ்டமிராது. ஏனெனில் இவர்களுடைய கிரஹம் லாபகரமான வியாபாரத்தை நாடும்படியான வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும். இரண்டாம் பகுதியில் பெரிய லாபத்தை அடையவும் இடமுண்டு.

ஜூன் 23, 26, 30, ஜூலை 5, 9, 13 தேதிகள் இவர்களுக்கு உத்தமம். ஜூலை 2, 7, தேதிகள் நல்லதல்ல.

தனுர்ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

ஜூன் 3-வது வாரத்திலிருந்து குரு 12-ல் இருப்பதும், 8-வது இடத்தில் சனி இருப்பதும் இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் நல்லதாகத் தோன்றவில்லை. செலவு படுகடுமையாகி பணமுடையும் ஏற்படும். இந்த சமயத்தில் கடன் வாங்குவதோ, கொடுப்பதோ கூடாது. எதிரிகள் ஏதேனும் அவதூறுகளைச் சொல்வார்கள். வேலையில் சிறிது மாறுதலுமேற்படும். சிலருக்குப் பிரத்யேகமாக லாபமேற்படவும் கூடும். வேலை கடுமை, ஆனால் அங்கீகாரமிராது. வியாபாரிகளுக்கு இரண்டாம் பகுதி நல்லது. வியாபாரத்தில் கிடைக்கும் வெற்றியைப்பற்றி அளவுக்கதிகமாக நம்பிக்கை வைக்கலாகாது. கண்மூடித்தனமாக ஹேஷ்யங்களில் இறங்கினால் நஷ்டத்தில் கொண்டுபோய்விடவும் இடமிருக்கிறது. புதிய சிநேகிதர்கள் ஏற்படுவார்கள். வியாபாரத்தில் புதிய கூட்டாளியாகச் சேர இடமிருக்கிறது. பெரிய வியாபாரப் புள்ளி

களின் உதவி உண்டு. குடும்பத்தில் ஏதேனும் கவலைகள் இருந்து வரும். இரண்டாம் பகுதியில் புதியதொரு ருசி பிறக்கும்.

ஜூன் 15, 16, 17, 26, ஜூலை 4, 5, 9, 13 தேதிகள் இவர்களுக்கு விசேஷமானவை.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம்பாதம் முடிய.)

மகரராசிக்காரர்களுக்கு இம்மாதம் அவ்வளவு விசேஷமாகத் தோன்றவில்லை. முக்கியமாகப் பண விவகாரங்களில் கவலைகளும் கஷ்டங்களும் இருந்துவரும். செல்வ வசதியில்லாதவர்கள் கடன்வாங்க நேரிடும். மற்ற இனங்களில் முடை இருந்துவரும். இம்மாத முதல் பகுதியில் சற்று பணவசதிகள் இருக்கும். மனைவி அல்லது புருஷனின் தேகசுகம் தரமாயிராது. உத்தியோகத் துறையில் ஏதேனும் திகைப்பேற்படும்படியான சம்பவம் நிகழலாம். அல்லது உறவினர்களைப் பற்றிக் கவனம் செலுத்த நேரிடும். உறவினருடன் அபிப்ராய பேதம் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவும். 11-வது இடத்தில் குரு இருப்பதால் வரப்போகும் எந்தக் கஷ்டங்களிலிருந்தும் தப்பலாம். எனவே கஷ்ட சமயத்தின் கடைசி எல்லையில், கடவுளின் கருணை கட்டாயம் உண்டு. ஜூலை 5-ந் தேதி வரை நண்பர்களின் உறுதிமொழிகளை நம்பவேண்டாம். பத்திர விஷயமாக ஏதாவது கோளாறு ஏற்பட்டதென்று கோர்ட்டுக்குப் போகக்கூடாது. வியாபாரிகளுக்கு இந்த சமயத்தில் ஹேஷ்யம் பயனளிக்காது. பணம் வியாபாரத்தில் முடங்கிக் கிடக்கும். கொஞ்ச காலத்தில் வியாபாரம் மேற்கொண்டு முன்னேறாமல் மந்தமாயிருக்கும். இரண்டாம் பகுதி கொஞ்சம் பாதகமில்லை. சிறிது மாறுதலின்றிக் கூட்டாளி முறை நன்கு நடைபெறாது. வேலைக்காரர் கோளாறுபற்றித் தீவிரமாக கவனம் செலுத்த நேரும்.

ஜூன் 16, 17, 26, 30 ஜூலை 5, 9,13 தேதிகள்) இவர்களுக்கு உதவிகரம்.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

கும்பராசிக்காரர்களுக்கு இம்மாதம் 6, 7, 8, 10 இடங்களிலுள்ள கிரஹங்களின் போக்கினால் உத்தியோகம், செல்வம் ஆகியவற்றில் சுமுகமான நிலைமை இருக்குமென்று தோன்றவில்லை. மனதில் கிலேசமும்ம் எண்ணிய காரியங்கள் பூர்த்திபெறாமல் ஏமாற்றம் ஏற்படுவதும் மேற்படி கிரஹ அமைப்பின் விளைவு. 10-வது இடத்தில் குரு இருப்பதால் சிலர் லீவில் போகும் நிர்ப்பந்தமேற்படும். சிலர் லீவிலிருந்து வேலைக்குத் திரும்பவும் நேரும். பண விஷயத்தில் நம்பிக்கை அதிகமாயிருக்கும். ஆனால் அதற்கேற்ற அளவில் பலனிராது. புத்திரர், அல்லது புத்திரி பற்றிக் கவலை ஏற்படும். கிட்டிய பந்துக்களைப்பார்க்கும்படியாகவோ அல்லது பிறந்த ஊர் போகும்படியாகவோ சந்தர்ப்பமேற்படலாம். முதல் பகுதி மாறுதல்களுக்கு ஏற்றது. பெரிய தனவந்தர்களின் உதவியை நாடுபவர்களுக்கு அவ்வுதவி கிட்டும். பல விஷயங்களைப்பற்றி மனம் தீவிரமாக ஈடுபட்டு நிற்கும். இரண்டாம் பகுதியில் தேகசுகம் பாதிக்கப்படும். பெயருக்கு ஏதாவது இழுக்கேற்படும். அல்லது மேலேயிருப்பவர்கள் அபிப்ராய பேதத்துக்கும், ஏமாற்றத்துக்கும் இடம் கொடுக்கலாம். ஜூலை 10ந் தேதி வாக்கில் உத்தியோகத்தில் ஏதாவது ஏமாற்றமேற்படும் அல்லது தேகாரோக்கியமிராது.

ஜூன் 16, 17, 26, 30 ஜூலை 5' 9, 13 தேதிகள் இவர்களுக்குத் தரம்.

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

மீனராசிக்காரர்களுக்குப்போன மாதத்தைவிட இது சற்று அபிவிருத்திகரமான மாதம். குடும்பத்துறையில் ஏதேனும் மாறுதலேற்படலாம். பண விஷயத்தில் புதியதொரு நிலைமை பிறக்கும். செய்யும் காரியம் பாராட்டுக்குப் பாத்திரமாயிருக்கும். குடும்ப சுகம் போதாது. உத்தியோகம் மொத்தத்தில் திருப்திகரமென்றாலும் ஊழியர்களின் ஒத்துழைப்பிராது. கார் சொந்தக்காரர்களுக்கு தங்கள் கார்களின் போக்கு மகிழ்ச்சியைத் தராது.

இரண்டாம் பகுதியில் மனைவி அல்லது புருஷன் சந்தோஷமாயிருக்கமுடியாது. அல்லது ஆரோக்கியத்துடனிருக்கமுடியாது. முதல் பகுதியில் செலவு கட்டுமீறிப்போகும். எதிரிடையாயிருப்பவர்களுடன் தகராறு வைத்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இரண்டாம் பகுதியில் சீக்கிரமாகக் கோபம் கொள்ளும் உணர்ச்சி ஏற்படும். பணக்காரர்களால் நிலத்தில் பண முதலீடு செய்ய நேரலாம். சொந்த நில புலன்களை விற்பதைக் காட்டிலும் வாங்குவது சுலபமாயிருக்கும். வெளியிடங்களைக் காட்டிலும், சொந்த இடத்திலேயே வியாபாரிகளுக்கு நல்ல வருமான வசதிகள் இருக்கும். பண விஷயத்தில் கவலைகள் மனதை விட்டுச் சுலபமாக விலகாது.

ஜூன் 15, 16, 21, 30 ஜூலை 5, 7, 9, 13 தேதிகள் இவர்களுக்குப் பயன் தரும் நாட்கள்.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,
117, பெரியதெரு,
திருவல்லிக்கேணி.

பால்காரி பூங்காவனம்

—நியாயவாதி—

இருபது வருஷங்களாய் எங்கள் அக்கிரகாரத்துக்கு வாடிக்கையாகப் பால், தயிர் வைப்பவள் பூங்காவனந்தான். அவள் கல்யாணம் ஆகி கணவன் வீட்டுக்கு வந்தது முதல் அவளே அந்த வியாபாரத்தைக் கவனித்து வருகிறாள் என்றால் அவளது தொழில் அனுபவத்தையும், சாமர்த்தியத்தையும்பற்றி அதிகம் கூற வேண்டுமா?

பூங்காவனத்தின் கணவன் கந்தசாமி ரொம்பவும் உல்லாஸமான பேர்வழி. கவலையின்றி சாப்பிட்டுவிட்டு கண்டபடி ஊர் சுற்றுவதுதான் அவனது நித்திய வேலை. கையில் நாலு காசு இருந்தால் அவன்பாடு குஷிதான். தன் சகாக்களுடன் ஹோட்டலில் வயிறுபுடைக்கத் தின்றுவிட்டு, நாடகம் பார்க்கப் போய்விடுவான். குடும்பத் தொழிலான பால், தயிர் விற்பனையை அவன் கவனிக்கமாட்டான். பூங்காவனமே அதைப் பார்த்துக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. நான்கு பசுமாடுகள், இரண்டு எருமை மாடுகள் இவை எப்பொழுதும் அவளிடம் இருந்தன. வாடிக்கையாக பால், தயிர் கொடுப்பதில் அவள் சற்றும் தவறமாட்டாள். அவள் கொடுக்கும் பால், தயிர், நெய் முதலியன சுத்தமானதாகவே இருக்கும். அதனால் அவளுக்கு எங்கள் அக்கிரகாரத்தில் நல்ல பெயர்.

பூங்காவனம் எப்பொழுதும் சிரித்த முகத்துடன்தான் இருப்பாள். ஆனால் பண விஷயத்தில் அவள் ரொம்பவும் கண்டிப்புக்காரி. மாதம் பிறந்து பத்து தேதிக்குள் முந்திய மாதத்தில் அவளுக்குச் சேரவேண்டியதை கொடுக்காவிட்டால் அவள் சும்மா இருக்க மாட்டாள். எப்படியாவது பணத்தை வாங்கிவிடுவாள். அவளிடம் சாக்கு போக்கு சொல்லி தவணை கேட்கமுடியாது. மேலும் அவள் சரியான புள்ளிகளுக்குத்தான் விற்பனையும் செய்வாள். யாரேனும் வாடிக்கைக்காரர் தன்னை ஏமாற்றவோ அபகரிக்கவோ நினைப்பதாகத் தெரிந்தால் அவர்களுடன் "வாடிக்கையை" நிறுத்திக்கொள்வாள்.

அவள் கையில் ஏதோ கொஞ்சம் பணம் சேர்ந்திருந்தது. அவள் கணவன் கந்தசாமி ஊதாரியாய் இல்லாதிருப்பின் அவளிடம் இன்னும் அதிக ரொக்கம் சேர்ந்திருக்கும். மாதா மாதம் அவன் செலவுக்கு அவள் பணம் கொடுக்க வேண்டியிருந்தது. மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை அவள் அவனுக்கு ஸமர்ப்பித்துவிட வேண்டும். அதற்கு மேல் அவன் கேட்கமாட்டான். தனக்கு மேற்கொண்டு செலவுக்குப் பணம் வேண்டும் என்றால் அதை அவனே சம்பாதித்துக்கொள்வான். நல்ல பசுமாடு அல்லது காளைமாடு வாங்கவேண்டும் என்றால் அந்த பக்கத்தாருக்கு கந்தசாமியின் உதவி நிச்சயம் வேண்டும். மாடுகளின் தராதம்யங்களைப்பற்றி அவனுக்குத் தெரிந்தது போல் வேறு யாருக்கும் தெரியாது. ஆதலால் மாடு விற்பவரும் சரி, வாங்குபவரும் சரி அவனது மத்தியஸ்தமின்றி ஒன்றும் செய்யமாட்டார்கள். இப்படி அவனுக்கு தரகு பணம் மாதா மாதம் பத்து, பதினைந்துக்குக் குறையாமல் கிடைத்து வந்தது.

பூங்காவனத்துக்குத் தன் கணவன் குடும்பத்தொழிலை கவனிக்கவில்லையென்பது குறைதான். அவனுக்கு கணக்கு வழக்கு தெரியாது. ஒரு சமயம் அவள் பிரஸவித்த பொழுது அவனே பால் தயிர் விற்பனையை கவனித்துக்கொள்ளும்படி நேரிட்டது. அப்பொழுது அவனால் சரியாய் அதை நிர்வகிக்க முடியவில்லை. அதனால் சுமார் ஐம்பது ரூபாய்க்கு மேல் நஷ்டம். எனினும் பூங்காவனமும் அவனும் மனமொத்த தம்பதிகளாகவே இருந்தனர். பூங்காவனம் அவனை ஒரு சமயத்திலும் கடிந்து கொண்டதில்லை. எப்பொழுதேனும் அவள் சிரித்துக்கொண்டே அவனைப்பார்த்து "இப்படி கவலையில்லாமல் ஊர் சுற்றுகிறீர்களே? இது எல்லாம் நான் உயிருடன் இருக்கும் வரையில்தானே? அப்புறம் உங்களை யார் கவனிப்பார்கள்?" என்பாள்.

கந்தசாமி கண்களை சிமிட்டிக்கொண்டே "போடி பைத்தியம்! அதைப்பற்றி இப்பொழுது என்ன கவலை? என்னைக் கவனிப்பதற்குத்தான் நீ ஒரு மகனைப் பெற்று இருக்கிறாயே? அவன் பார்த்துக்கொள்ள மாட்டானோ?" என்பான்.

அத்தகைய பொறுப்பு அவன் மகன் பாலுவுக்கு ஏற்படவில்லை. பாலு ஆறுவயது சிறுவனாயிருந்த பொழுதே கந்தசாமி திடீரென்று இறந்து போனான். பாவம்! பூங்காவனம் விதவையானாள்.

பூங்காவனம் பாலுவை மிகவும் அருமையாய் வளர்த்து வந்தாள். யுக்த வயது வந்தவுடன் அவனைப் பள்ளிக்கூடத்திலும் படிக்கவைத்தாள். ஆனால் அவனுக்கு அதிக படிப்பு ஏறவில்லை. ஐந்து வகுப்பு வரையிலும் படித்தான். பின் படிப்பை நிறுத்திக்கொண்டான். ஏதோ எழுதப்படிக்கத் தெரியும். அதுவே போதும் என்பது அவளது திருப்தியான நம்பிக்கை.

பாலு ரொம்பவும் அழகாய் இருப்பான். ரொம்பவும் உல்லாஸமான பேர்வழி அவன். தகப்பன் கந்தசாமியைப் போலேதான் அவனும். வயது வந்ததும் அவன் தன் போன்ற வாலிபர்களுடன் திரிய ஆரம்பித்தான். பூங்காவனத்துக்கு அவன் அனுசரணையாய் இருப்பதில்லை. பால் வியா

பாரத்தை அவன் கவனிப்பதில்லை. "நீயே பார்த்துக்கொள் அம்மா!" என்று அவன் அவளிடம் கூறிவிட்டான்.

பாலுவுக்கு அபாரமான சினிமா மோகம். அவனுக்கு நாட்டில் தயாராகும் பேசும்படங்கள், அதில் நடிக்கும் நட்சத்திரங்கள் அவர்களது வாழ்க்கை விவரங்கள்—இவையெல்லாம் மனப்பாடம். ஒரு புது படம் காண்பிக்கப் படுகிறது என்றால் அந்த இடத்தில் அவனை நிச்சயமாகக் காணலாம். அவன் பார்க்காத பேசும் படமில்லை. அவன் சினிமா பத்திரிகைகள், சினிமா நட்சத்திரங்களின் படங்கள், டாக்கி கீதங்கள்—இவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் சேகரித்து வைத்திருந்தான். நாள் தவறினும் அவன் சினிமா பார்ப்பதை தவறமாட்டான்.

இரவு எப்பொழுது வரும் என்று அவன் பகலெல்லாம் காத்திருப்பான். இருட்டினவுடன் அவன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கிளம்பினால் பிறகு ஏதேனும் ஒரு சினிமா கொட்டகைக்குள் அவனைப் பார்க்கலாம். திரும்பி வரும் பொழுது நடு ஜாமத்துக்குமேல் ஆய்விடும். ஏதேனும் டாக்கி பாட்டுக்களை உரக்கப்பாடிக்கொண்டேதான் அவன் திரும்பி வருவான். அப்பொழுது தெருவில் தூக்கம் கலைந்து விழித்துக்கொள்ளுபவர்கள், "ஓஹோ! மணிஒன்றுபோல் இருக்கிறது ஆட்டம் முடிந்து போய்விட்டது போல் இருக்கிறது" என்று நினைப்பார்கள்.

எந்தப் படத்தைப்பற்றிக் கேட்டாலும் பாலு தங்கு தடையின்றி விவரங்கள் கூறுவான். ஒரு நடிகனையோ அல்லது நடிகையையோ பற்றி அவன் வைத்திருக்கும் குறிப்புகளும், படங்களும் ஒரு சினிமா பத்திரிகாலயத்திலும் அவ்வளவு பூர்ணமாய் இராது. படங்களைப்பற்றி அவன் கூறும் மதிப்புரைகள் அவன் ஒரு உண்மையான சினிமா-கலா ரசிகன் என்பதை அறிவிக்கும். "இவ்வளவு தேர்ச்சிபெற்ற இவன் ஒரு சினிமா பத்திரிகையை நடத்தலாமே" என்று சிலர் கூறி நான் கேட்டிருக்கிறேன்.

மகன் விஷயத்தில் தாய்க்கு உள்ளூர மனத்தாங்கல்தான். "என்ன பூங்காவனம்! பாலு என்ன செய்கிறான்," என்று நான் ஒரு சமயம் அவளைக் கேட்டதற்கு அவள் சலிப்புடன், "ஆமாம்! சட்டியும் பானையும் பண்ணுகிறான்! என்னமோ, போங்கள்! சினிமா சினிமா என்று அலையுது, வயது இருபதுக்கு மேல் ஆய்விட்டது. எனக்கு வயசாயிற்று. என்றைக்காவது ஒரு நாள் நான் போக வேண்டியவள் தானே! அப்புறம் அவன் என்ன பண்ணுவானோ? குடும்ப வியாபாரத்தைக் கவனித்தால்தானே. அவன் அப்பன் தான் அப்படி இருந்தது என்றால் பிள்ளையும் இப்படி இருக்குதே" என்று கூறி விட்டு சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அப்பொழுது அவளிடம் தயிர் வாங்கிக்கொண்ட என் மனைவி, "இதோ பார் பூங்காவனம்! நான் சொல்லுவதைக் கேள்! பேசாமல் உன் பிள்ளைக்கு நல்ல கெட்டிக்காரப் பெண்ணைப் பார்த்து கட்டிவிடு. அவளிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிடு. உன் புருஷன் ஊர் சுற்றும் பொழுது நீ எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தாயல்லவா? அதைப் போல் உன் மகன் திரியும்பொழுது உன் மருமகள் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுவாள்" என்றாள்.

அதைக் கேட்டவுடன் பூங்காவனத்தின் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது. "ஆமாம் அம்மா! நீங்கள் சொன்னது சரியான யோசனை! எனக்கு ஒன்றுவிட்ட அண்ணன் இருக்கிறான். அவனுக்கு ஒரு பெண் இருக்கிறது. நல்ல கெட்டிக்காரப் பெண் அது. அதை பாலுவுக்குக் கட்டிவிட்டால் அப்புறம் எனக்குக் கவலை இல்லீங்க" என்றாள்.

மூன்று மாதங்களுக்குப்பின் பூங்காவனம் புதிதாய் விவாகமான இளம் தம்பதிகளை அழைத்துக்கொண்டு ஒரு தட்டில் வெற்றிலை, பழம், புஷ்பங்களுடன் என் வீட்டுக்கு வந்தாள். அத் தம்பதிகள் வேறு யாருமில்லை. பூங்காவனத்தின் மகன் பாலுவும் மருமகள் கண்ணம்மாவுமே.

தன்னை நமஸ்கரித்த கண்ணம்மாவைப் பார்த்ததுமே என் மனைவி தன் அபிப்பிராயத்தைக் கூறிவிட்டாள். "பெண் நல்ல கெட்டிக்காரியாய் இருப்பாள். முகத்தில் 'குரு குரு' என்று களை சொட்டுகிறது இனி பூங்காவனத்துக்குக் கவலை இல்லை" என்றாள்.

அவள் கூறினது வீண் போகவில்லை. இப்பொழுது அக்கிரகாரத்துக்குப் பால், தயிர் போட கண்ணம்மாதான் வருகிறாள். பூங்காவனத்தைப்போல முக்கால் திட்டம்தேர்ந்து விட்டாள். கணக்கு வைத்துக்கொள்வதில் கெட்டிக்காரி. பணம் வசூலிப்பதிலோ மாமியாரைவிட கைதேர்ந்தவளாய் விட்டாள். இனி பாலுவைப்பற்றிக் கவலை இல்லை. அவன் எந்த சினிமா பார்க்கப் போனால்தான் என்ன? குடும்ப வியாபாரத்தைக் கவனிக்கத்தான் பொறுப்பாக ஒருத்தி ஏற்பட்டு விட்டாளே!

ஸையாம் ரீஜென்ஸி கவுன்ஸில் மெம்பரான ராஜகுமார் தானிநிவாஸ் இந்தியாவிலுள்ள காசி, கயை போன்ற பௌத்த ஸ்தலங்களில் யாத்திரை செய்து வருகிறார். அவர் தமது இரு குமாரிகளுடனும் குமாரனுடனும் மே 27-ந்தேதி டில்லியில் பண்டித நேருவை சந்தித்துப் பேசினார். படத்தில் இடது கோடியில் காணப்படும் யுவதி பண்டித நேருவின் சகோதரி புத்திரியான ஸ்ரீ ரிதா பண்டிட்.



‘எங்கே மாமி, ருக்குவைக் காணோம்?’ என்றாள் சரோஜா.

‘ஏன், மீதிப்பேரெல்லாம் மனுஷ்யாளாகப் படவில்லையாக்கும்?’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘பார்த்தீர்களாமாமி. நான் அப்படியா சொன்னேன்? எங்கே ருக்குவைக் காணோம் என்றுதானே கேட்டேன்? ருக்கு என்ன அதிகம் வேண்டியவள், நீங்கள் என்ன வேண்டாதவர்களாகப் போய்விட்டது? என் வரையில் எனக்கு எல்லாரும் ஒன்றுதான். சிலபேர்கள் இருக்கிறார்களே, இன்று ஒருவரோடு அப்படியே பிராணனையே கொடுத்துவிடுகிறமாதிரி பழகுவார்கள். நாளைக்கே அவர்களோடு அற்ப விஷயத்துக்காகச் சண்டை போட்டுவிட்டு இன்னொருவருடன் இதைவிட நூறு பங்கு அதிகமாகப் பழகுவார்கள். சமயத்துக்குத் தகுந்த மாதிரி முகத்துக்கு இச்சகமாகப் பேசுவது அந்த மாதிரியெல்லாம் நெஞ்சில் விஷத்தை வைத்துக்கொண்டு உதட்டில் அமிர்தத்தைத் தடவிக்கொண்டு பேசத் தெரியாது எனக்கு,’ என்றாள் சரோஜா.

‘அதெல்லாம் ஒன்றுமில்லையடி. வெறுமனே வேடிக்கைக்காகச் சொன்னேன். அவளுடைய அண்ணா வந்திருந்தான். அழைத்துக்கொண்டுபோயிருக்கிறான். ராத்திரி வந்துவிடுவான். அது கிடக்கட்டும், தனிக்குடித்தனக்காரியாய்ப் போய்விட்டாயே. இன்று என்னடி சமையல்?’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘இன்றுதான் ஏகாதசியாயிற்றே’ என்றாள் சரோஜா.

‘ஏகாதசியானால் உங்களுக்கென்ன? ஏதோ ‘கிழங்கட்டுகள்’ இருக்கிற குடும்பம் மாதிரி பேசுகிறாயே, உன் மாமனார், மாமியார்தான் கிராமத்தில் தனியாய் இருக்கிறார்கள். நீங்கள் ரெண்டு பேர்தானே? ஏன், ‘உங்களவர்’ (அகத்துக்காரர்) பலகார நியமம் ஏதாவது வைத்துக்கொண்டிருக்கிறாரா, என்ன?’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘ஆமாம், கொஞ்சம் ஆசாரந் தான்போலிருக்கிறது. நேற்று ‘கச்சம் கிச்சம்’ வைத்து வேஷ்டி உடுத்துக்கொண்டு கோவிலுக்குவந்திருந்

ருக்கு சொல்லுகிறாள்

★

‘என்னடி இது?’ என்றேன்.

‘நாகரிகம்!’ என்றாள்.

கழுத்திலே வைர அட்டிகை, சுரணை சுரணையாக செயின்கள், கை நிறைய வளையல்கள், மூக்கிலே எட்டுக்கல், மூன்று கல் பேஸரிகள், கெட்டிக்கரைப் புடவை (நல்ல வேலை, புடவை வைஷ்ணவக்கட்டு இல்லை) தலையில் இரட்டைப்பின்னல், உண்மையில் கூத்தில் ‘பபூன்’ வேஷம் வருகிறமாதிரிதான் இருந்தது.

சுஜாவுக்கு வயது 20 தான், 30, 40 ஆகிவிடவில்லை. இரட்டை நாடி. காத்திரமான சரீரம். இருந்தாலும் அவளுக்கு அந்த இரட்டைப்பின்னல் எடுப்பாக இல்லை.

இவளே, கழுத்தில் காதில் ஒன்றுமில்லாமல், ‘மொட மொடவென்று’ சலவை செய்த ‘லைட்’டான புடவை, இதுகளுடன் இரட்டைப்பின்னல் போட்டுக்கொண்டு வந்தால் நன்றாக இருக்குமோ என்னவோ!

இரட்டைப்பின்னல் மாத்திரம் எல்லோருமே போட்டுக்கொண்டுவிடலாம் என்கிறீர்களா? மற்ற எல்லாவற்றிற்கும் இருக்கிற நியதி இதற்குமாத்திரம் இல்லாமல் போய்விடுமா என்ன?

எத்தனை பசங்கள் இரட்டைப் பின்னலுடன் தோளில் ஒரு பையை மாட்டிக்கொண்டு டாக் டாக் என்று நடந்து போகிறதுகள்! அதுவும் ஒரு அழகாகத்தான் இருக்கிறது.

தார். கோவிலில் ஏதாவது உபந்யாஸம் 'அது இது' என்றால் தவறுவதில்லை. ஏதோ தெரியாமல்கிராப்வைத்துக்கொண்டுவிட்டார்போலிருக்கிறது' என்றாள் விமலா.

'அதற்கென்ன, நாளைக்கே குடுமியாக மாற்றிவிடுகிறார். அதற்கென்று தனியாக ஏதாவது பணம் காசு செலவா? நாம் சொன்னபடி கேட்கிறது' என்றாள் சாந்தா.

'ஏன் வரவர ரொம்ப கிராப்புகள் குடுமியாக மாறிக்கொண்டு வருகிறது. எங்கள் தமையன் கூட கிராப்பை எடுத்துவிட்டுக் குடுமிதான் வைத்துக்கொண்டுவிட்டான். அது ஒரு காலம், இது ஒரு காலம்! என்றாள் வஸந்தா.

'கிராப்பிலும், குடுமியிலும் என்னடி இருக்கிறது? மனசு சுத்தமாய் இருக்க வேண்டும். வெறும் வேஷம் போட்டுவிட்டால் மாத்திரம் ஆகிவிட்டதா?' என்றாள் பானு.

'உன் வாய்க்குச் சர்க்கரை தானடி போடவேண்டும். எங்கள் மாமா கூட இதேமாதிரிதான் சொல்வார், வெளி வேஷத்தைக் கண்டு ஏமாறக்கூடாதென்று. இந்தக்காலத்துப்பசங்களில் எத்தனையோ இருக்கிறதுகள், கிராப் வைத்துக்கொண்டு பாஷணாய் இருக்கிறதுகளே யென்று அதுகளை நாஸ்திகர்கள் என்று எண்ணி அலட்சியமாய் இருந்து விடக்கூடாது. அதுகளுக்கு இருக்கிற தெய்வ பக்தியும், மனசுத்தமும்; வைதிகம் ஆசாரம் என்று பூச்சி காட்டுகிறார்களே சில பெரியவர்கள், அவர்களிடம் கூடக் காண முடியாது. உள்ளொன்று, வெளியொன்று என்பதே அதுகளுக்குத் தெரியாது என்பார்' என்றாள் சரோஜா.



'உங்களவர் சமாசாரம் என்ன சொல்லு, ஏகாதசி பலகாரமா?' என்றாள் ருக்குவின் மாமியார்.

பலகாரமாவது, அதைத்தான் சொல்ல வந்தேன். சுத்த உபவாஸம். சில பேர் வெளிக்காக உபவாஸம், உபவாஸம் என்று சொல்லிக்கொண்டு மறைவில் தெரியாமல். தெரியாமல் வயிற்றை நிரப்பிக்கொண்டிருக்கிறார்களே, அந்த மாதிரி தெரியவே தெரியாது இவருக்கு. காப்பி என்றால் பிராணன் இவருக்கு. இருந்தாலும் ஏகாதசியன்று அதை மனதால்கூட நினைக்க மாட்டார். தேவலோகத்திலிருந்து அமிர்தத்தையேதான் கொண்டு கொடுங்களேன். துளி கூட எடுத்து வாயில் போட்டுக் கொள்ளமாட்டார். ஒரே பிடிவாதம்தான். காலையில் எழுந்தவுடனே ஸ்நானம் செய்துவிடுவார் சந்தி சாவித்திரியெல்லாம் முடித்துக்கொண்டு, பத்து நிமிஷ காலம் ராமாயணம் வாசிப்பார் பிறகு சாப்பிட்டுவிட்டு ஆபீஸ் போய்விடுவார். மாலையில் வந்தவுடனே சந்தியாவந்தனத்தைமுடித்துக்கொண்டு சகஸ்ர நாமம் சொல்வார். பக்கத்துத் தெருவில்தான் கோவிலிருக்கிறது. சௌகரியப்பட்டால் கோவிலுக்குப் போய் பெருமாளை சேவித்துவிட்டு வருவார். சௌகர்யப்படாவிட்டால் சில நாளைக்குப் போகாமலும் இருந்துவிடுவார். இது அவருடைய அன்றாட வழக்கம். வீண் படாடோபமெல்லாம் தெரியவே தெரியாது. அவருக்கு' என்றாள் ஸரோஜா.

'அதெல்லாம் எங்கள் பெரியப்பாதான்' என்றாள் வஸந்தா.

'ஏன்? என்ன செய்வார் உங்கள் பெரியப்பா?' என்றாள் பானு.

'வெறும் வேஷம். எங்கள் அப்பாவுக்கு அவருடைய வேஷத்தைக் கண்டால் அடியோடு பிடிக்கவே பிடிக்காது. முதலில் மனச்சுத்தம் என்பதே கிடையாது. பாகப் பிரிவினையில் எங்கள் அப்பாவை ரொம்பவும் வஞ்சித்துவிட்டாராம். எங்கள் அப்பா ரொம்ப ஸாது பாவம். வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிறவர். அடியோடு ஏமாற்றிவிட்டார். இன்றைக்குக்கூட எங்கள் அம்மா சொல்லிச் சொல்லி மாய்ந்து போவாள். ஆனால் அப்படி ஏமாற்றி எடுத்துக்கொண்டு போனாரே தவிர அவர் அப்படி ஒன்றும் பிரமாதமாக வாழ்ந்துவிடவில்லை. பாகப் பிரிவினை செய்துகொண்டுபோன மூன்று மாதத்துக்கெல்லாம் அவருடைய வீட்டில் திருடன் புகுந்தான். நகை, வெள்ளிப் பாத்திரம், புடவை, வேஷ்டிகள் எல்லாமாக மூவாயிரம் ரூபாய்க்குப் போய்விட்டது. போனவருஷம்தான் மழையில் வீட்டின் பின்கட்டு அப்படியே விழுந்துவிட்டது. கடன்கூட நிறைய இருக்கிறதாம். சொல்லிக்கொள்கிறார்கள். அத்துடன் எங்கள் பெரியம்மா தனிக்குடித்தனம் போனநாள்முதற்கொண்டு, இன்றுவரை ஒன்று மாற்றியொன்று உடம்புக்கு ஏதாவது இருந்தபடியேதான்.

பாரு பணம் டாக்டருக்குத் தான் போய்ச் சேருகிறது. பெரிய பெண்ணை நல்ல இடம் என்று எவ்வளவோ ஒசத்தியாய் நிறையச் செலவழித்துக் கல்யாணம் செய்து கொடுத்தார். அவன் (மாப்பிள்ளை) 'வார் ஸர்வீஸுக்கு' (யுத்த சேவைக்கு) போகிறேனென்று போனான். அதை விட்டுவிட்டு வந்து இப்பொழுது பெங்களூரிலிருக்கிறானாம். யாரோ வேறு ஒருத்தியைரிஜிஸ்தர்கல்யாணம் செய்துகொண்டிருக்கிறானாம். அது நிஜமோ, பொய்யோ தெரியாது. ஆனால் அவன் வீட்டு வழி வருகிறதில்லை. கடிதமும் கிடையாது. பெண் பெரியப்பா வீட்டோடுதான் இருக்கிறாள். அப்பாவை அவர் ஏமாற்றிவிட்டாரேயொழிய இந்த வேளைக்கு பெருமாள் புண்யத்தில் நாங்கள் நன்றாகத்தான் இருக்கிறோம்' என்றாள் வஸந்தா.

'தெய்வம் என்று ஒன்று எதற்காகடியம்மா இருக்கிறது? என்றாள் ருக்குவின் மாமியார்.

'எதற்காகச் சொல்ல வந்தேனென்றால், மனதில் இவ்வளவு கெட்ட எண்ணம் இருக்கிறது. வெளிக்குப் பார்த்தாலோ, அவர் பண்ணுகிற படாடோபம், காலையிலும் மாலையிலும் ராமாயண பாராயணமென்ன, கீதா சிரவணமென்ன, ஒரே அமர்க்களம்தான். அதுவும் புதிதாக வீட்டுக்கு யாராவது வந்துவிட்டால் கேட்க வேண்டியதில்லை. யாராவது பார்த்தால் 'அடடா! என்ன ஆசாரம்! என்ன அனுஷ்டானம்! இப்படிக்கூட இந்தக் காலத்தில் இருக்கிறார்களா?' என்றுதான் சொல்வார்கள். அத்தனையும் உள்ளுக்குள் விஷம். இத்தனைக்கும் எங்கள் அப்பாவை நாஸ்திகன், ஒரு ஆசார அனுஷ்டானம் கிடையாது என்று தூற்றிக்கொண்டேயிருப்பார்' என்றாள் வஸந்தா.

'எல்லாம் வெளிவேஷம். மனச்சுத்தம் இல்லாமல், கீதையாவது பாராயணமாவது



"......கச்சம்வைத்து கட்டிக் கொண்டு......"

அதையெல்லாம் உடைப்பிலே கொண்டுதள்ளடி. மனச்சுத்தம் இருந்தால் போதும். அதுதான் ஆசாரம். அனுஷ்டானம் எல்லாம்,' என்றாள் பானு.

'அப்படியென்றால் நீகூட உபவாஸமா?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அதெல்லாம் என்னால் முடியாது மாமி. எதை விட்டாலும் விட்டுவிடலாம், காப்பி இல்லாமல் மாத்திரம் என்னால் இருக்க முடியாது. இதற்குப் பயந்து தானே அவசியம் சாபபிட வேண்டிய நாட்டு மருந்தை சாப்பிடாமல் இங்கிலீஷ் மருந்து சாப்பிட்டேன். எனக்கு மாத்திரம்தானே என்று உப்புமா பலகாரம் செய்துகொண்டேன்' என்றாள் சரோஜா.

'ஏன்? எங்கள் பாட்டி இருக்கிறமாதிரி உபவாஸம் இருக்கிறதுதானே?' என்றாள் பானு.

'அதென்னடி அது. அப்படியென்று ஒரு உபவாஸம் இருக்கிறதா என்ன?' என்றாள் சரோஜா.

'எத்தனையோ வேடிக்கைகளில்' அது ஒன்று. ஏகாதசிக்கு முதல்நாள் ராத்திரி நல்ல ரஸ்தாளி பழமாக ஒரு டஜன் வாழைப்பழம் வாங்கிக் கொண்டு வரச்சொல்வாள். பத்துபலம் நாட்டுச் சர்க்கரையை வைத்துக் கொள்வாள். தொட்டு, தொட்டு அத்தனையையும் ஐந்து நிமிஷத்தில் உள்ளே தள்ளிவிட்டு உப்பைப் போட்டுக் குழம்பாக இரண்டு டம்ளர் மோர் சாப்பிட்டுவிடுவாள்' என்று பானு சொல்லி முடிப்பதற்குள், 'சரிதான் ஏகாதசி உபவாஸம் இருக்கட்டும். அதற்கு மறுநாள் துவாதசி பாரணைக்குப் பசி எடுக்க வேண்டுமே, அதற்கு என்ன செய்வாள்? ரொம்ப கஷ்டமடி இந்தமாதிரி உபவாஸம் இருப்பது!' என்றாள் சரோஜா.

எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள்.

'உலகத்தினுடைய போக்கே வெகு விசித்திரமாகத்தான் இருக்கிறது. யாருக்கோ மாதிரி எண்ணிக்கொண்டு ஜனங்கள் அநேக விஷயங்களில் இந்த மாதிரியெல்லாம் அசட்டுப் பிசட்டென்று நடந்துகொள்ளுகிறதுகள். அதுதான் நேற்று கேட்டது எதிரகத்துப் பிள்ளை அதனுடைய பாட்டியை. இதையெல்லாம்விட ஒருநாளைக்குப் பசி எடுக்காமலிருக்க டாக்டரிடம் ஏதாவது மருந்து வாங்கிச் சாப்பிட்டுவிடுகிறது தானே பாட்டி யென்று' என்றாள் ருக்குவின் மாமியார்.

'இப்படியெல்லாம் இருந்தால் ஏன் கேட்காதுகள்? நன்றாகக் கேட்குங்கள். அதுவும் இந்தக் காலத்துப் பசங்களுக்குச் சொல்லித்தரவேண்டுமா' என்றாள் பானு.

'சரி நேரமாகிறது. வீட்டில் கொஞ்சம் வேலையிருக்கிறது' என்று எழுந்தாள் ஸரோஜா.



அன்று தை வெள்ளிக்கிழமை. எனவே, என் தாயாரின் கட்டளைப்படி பக்தியுடன் பிரதட்சிணம் செய்து அம்பிகைக்கு அர்ச்சனை செய்துவிட்டு வீட்டிற்கு வரும்போது மாலை மணி 7-க்கு மேலாகிவிட்டது. என் தந்தை என்னை அன்று லேசாகக்கூடக் கடிந்துகொண்டார். வயது வந்த பெண்ணுகையால் கல்யாணமாகாமல் எந்தப்பொது ஸ்தலத்திற்கும் போகக்கூடாதென்பது அவரது எண்ணம். இதில் இருட்டிவிட்டாலோ கேட்கவே வேண்டாம். என் தாய்க்கு நான் தவருமல் அம்பிகை தரிசனம் செய்தாலாவது எனக்கு சீக்கிரம் விவாகமாகிவிடாதா? என்பது அவளது ஆவல் இது விஷயமாக அப்பா, அம்மாவுக்குள்ளேயே சதா அபிப்ராயபேதம் ஏற்படும்.

கறுப்பாய்ப் பிறந்தது என் தப்பா? முகத்தில் பல இயற்கை வடுக்கள் தோன்றி தலையில் செம்மட்டையுடன்கூடிய கேசத்தை நான் கண்ணுடியில் பார்க்கும்போது எனக்கே அருவருப்பு தட்டுகிறதே! அதற்குப் பொறுப்பாளி நானு?

என் தந்தை என்னை செல்வமாகத்தான் வளர்த்தார். அதனுல் என்னை வீட்டிலேயே 'பிரைவேட்' வைத்து கல்வித்துறையில் சுசடற கற்க வசதி செய்தார். கல்வியிலும் உழைத்ததற்குப் போதிய பலன் கிட்டவில்லை. சுருங்கக்கூறின் பலரும் பல விஷயத்தில் என்னைப் பார்க்க அருவருப்படைந்தனர் என்றுலும், பருவ கால இயற்கையழகை மேலே கூறியவைகளால் வெல்ல முடியவில்லை. நான் 23 ம் வயதின் இறுதியில் சென்றுகொண்டிருந்தேன். இப்போது நான் நிலைக்கண்ணுடியின் முன் நின்றுல் முன்போவில்லை. முகத்தில் ஓர் பொலிவு. பருவத்தின் அழகு என்னை வஞ்சிக்கவில்லை. இப்போது நான் பெருமிதம் கொண்டேன். நான் பார்வைக்கு அரூபியானுலும் என் உள்ளம் பெண்மை அன்ரே? பெண்மையின் உணர்ச்சி என்னைத் தீண்டாமற் போகவில்லை.

அன்றிரவு மணி 12 இருக்கும். நல்ல நிலவு படர்ந்திருந்தது. கல்யாணமாதமாகையால் ஆங்காங்கு மேளச் சத்தமும் நாகஸ்வரமும் காற்றில் மிதந்து கலந்து வந்தன. என் தோழிப் பெண்கள் அனைவருக்கும் இந்த வருஷம் கல்யாணம். அவர்களின் ஊர்வலம் என் வீட்டின் வாசலைத்தாண்டிச் செல்கிறது. புதுப்புடவையும், நல் வயிரமணியும் பக்கத்தில்...அவரும் உட்கார ஜோராக ஊர்வலத்தில் செல்கிருர்கள். என் வீட்டு வாசலில் ஊர்வலம் நின்று நான் ஆரத்தி எடுக்க வேண்டுமென்பது என் தாயின் உத்தரவு. ஆரத்தி எடுக்கப்போனேன். என்னை எல்லோரும் கவனிக்கின்றனர்! சில பெண்டிர் உன் பெண்ணுக்கு இவ்வருடம் கல்யாணம் செய்யவில்லை? என்று கேட்ட கேள்வி என்னை ஓர் குலுக்கு குலுக்கியது. நான் பேசாமல் வெற்றிலைப்பாக்குகூடவாங்காமல் உள்ளே சென்றுவிட்டேன் கடியாரத்தில் மணி 1 என்பதை மணியோசை தெரிவித்தது என் மனத்துடிப்பின் எதிரொலி போல வாசலில் தவுல்காரன் பிளந்து எரிந்தான்.

அம்பிகே! என் வாழ்நாளே இப்படித்தான் முடியப்போகிறதா? எப்போது என்னை ரூபமில்லாமல் சிருஷ்டித்தாயோ அப்போதே எனக்கென்று ஓர் மணுளனையும் நீ சிருஷ்டி செய்யாமலா இருப்பாய்? என்னைப் பார்க்க வந்தவர் எல்லோரும் ஒருமுகமாக பெண் பிடிக்கவில்லை என்றுல்? என் மனம்! என் பருவம்! என் உணர்ச்சி!!! ஏ! அம்பிகே!! என் இருதயத் தீங்குரல் உன் செவிக் கெட்டாதோ? என்னுல் பெற்ரேர் கொள்ளும் கவலையும், வேதனையும், ஊரார் பேசும் அவச்சொல்லும், இதுகூட உன் செவிக்குக் கேட்கவில்லையா! தொடர்ந்து உன்னை அரை மண்டலமாகத் தரிசனம் செய்கிறேனே. பலன் எனக்குண்டா? உன் அருள் வெள்ளத்தை ஈவாயா? என்று வாய் விட்டுக் கூறி படுக்கையில் படுத்தேன். இந்நிலையில் தூக்கமா வருகிறது. எப்படியோ கஷ்டப்பட்டு இரவைக் கழித்தேன்.

அம்பிகையின் அருள் கிட்ட நேரமாகவில்லை. பொழுது புலர்ந்தது. புள்ளினங்கள் ஆர்த்தன. உதய சூரியன் என் முகத்தை லேசாகத் தழுவி தன் பொன் ஒளிக் கிரணத்தை வீசினுன். என் வாழ்வின் புது அத்யாயமும் அன்றுதானே தொடங்குகிறது. காலை மணி 8 இருக்கும். வாசலில் ஓர் குதிரை வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஓர் நடுத்தர வயதுள்ள ஓர் சுந்தர புருஷரும், அவருக்குச் சற்று மூத்தவளாக இருக்கும் ஓர் ஸ்திரீயும் இறங்கினர். முன்னறிவிப்பின்றி வந்த அவர்களை அப்பா வரவேற்றுர். அதிகம் வளர்த்துவானேன். அவருடன் வந்த மாது அவரது மூத்த சகோதரியாம். சுருக்கம் இதுதான்:—அவர் மருங்காபுரி

பக்கம் பெரிய மிராசுதாரர். நிறைய நிலபுலமுண்டு. வயது 45 இருக்கும். இருமனைவியரும் இருந்தனர். இருவருக்கும் புத்திர பாக்யம் இல்லை. அவர் குடும்பத்துக்கு ஓர் ஆண் மகவு வேண்டியிருந்தது. அவர் சகோதரி பெரியம்மா, இருவர் சொத்தையும் சேர்த்து அனுபவிக்கும் அவருக்கு ஓர் ஆண் மகவு அவசியமல்லவா?

எனவே, அவர் என்னை மூன்றும் தாரமாக ஏற்கச்சம்மதித்தார்.

இதுதான் விஷயம். எனக்கு உச்சி குளிர்ந்து விட்டது! என் வாழ்வே கன்னியாகக் கழியுமோ என்றிருந்த என் மனம் மிகுந்த ஆறுதலடைந்தது. என் பெற்றோரும் சம்மதித்தனர். இல்லாவிட்டால் எனக்கு ஏது விவாகம்? அம்மா அவருக்குக் காப்பி தயாரித்தாள். நான் அதைக் கொண்டு போனேன். நன்றாக அலங்கரித்துக் கொண்டுதான் போனேன். கையில் காப்பியுடன் நின்ற என்னை ஏற இறங்கப்பார்த்த அவர் என்ன நினைத்தாரோ! காப்பியைக் கீழே வைக்கும்படி செய்கை செய்தார். என் இருதயத்தில் முதலடி விழுந்ததை உணர்ந்தேன்.

கடவுளுக்கு சில்ரைக் கஷ்டப்படுத்தி பார்ப்பதிலே அலாதி பிரேமையெனத் தோன்றுகிறது. என் கணவர் ஓர் பிரபல மிராசுதார். நல்ல ஐவேஜிக்காரர். கல்யாணமாகி 5 வருடமாகியும் ஏன் புத்திர பிராப்தி உண்டாகவில்லை? என் வாழ்வு ஓர் புதிராகவே சென்றது. பெயரளவில் நான் அவருக்கு மனைவி, கணவன் என்ற முறைக்கு அவர். அத்தனை பெரிய பங்களாவில் சர்வ சுதந்திரமும் எனக்குண்டு. ஆனால் அவர் வாய் திறந்து ஓர் வார்த்தைகூட என்னுடன் பேசுவதில்லை. என் உள்ளம் ஏங்கித் துடித்தது. எல்லா வேலைகளையும் பணியாட்களே செய்வர். இந்நிலையில் அவர் என்னையும் தவிர இன்னுருத்தியை நாலாம் தாரமாகக் கொள்ள ஏற்பாடு செய்யக் கிளம்பி விட்டார். ஏனோ என் மனம் இதற்கு இடமளிக்கவில்லை. உடலும் அப்படித்தான் இருந்தது. இயற்கைக்கு விரோதமாக அவர் உத்திரவின்றி அவர் படுக்கையறைக்குப் போனேன். பக்கத்தில் உட்கார்ந்தேன். நா தழு, தழுக்க மன்........னி........க்க........வேண்டும். தங்கள் விவாக விஷயத்தை கொஞ்ச காலத்திற்கு தள்ளிப்போடலாம். இன்னும் 6 மாத காலத்தில் தாங்கள் தகப்பன் ஸ்தானத்தை வகிக்கப்போகிறீர்கள். என்று கீழே சாய்ந்தேன். அவர் உணர்ச்சியுடன் முதுகை அன்புடன் தழுவி அசடே! அழுவதற்கு இதில் என்ன இருக்கிறது? இது நான் வேண்டிய வரப்பிரசாதம் அன்றோ! இது சந்தோஷச்செய்தியல்லவா? எனக்கூறி, என் கன்னத்தை மிருதுவாகக் கிள்ளினர். அன்றிலிருந்து அந்த அரண்மனைக்கே நான் ராணி! ஓர் ஸ்திரீயின் உயர்வுக்குப் புத்திர பாக்கியமே பிரதான்யமளிக்கிறது என்பதை நான் பூரணமாக உணர்ந்தேன். அன்றுடம் என் தேக நிலையைக் கவனிக்க பிரைவேட் லேடி டாக்டர். நான் ரொம்பவும் பேசக்கூட, கூடாது என்று என் கணவர் என்னிடம் பணிவாக வேண்டிக்கொண்டார். கருவுற்றதனாலோ என்னவோ என் முகத்தில் வடுக்கள் மாறி, மேனி அழகிட்டு, என் முகம் களை பொருந்தியதாக மாறிற்று. நான் இப்போது ரூபவதி! அதிர்ஷ்டவதி! சௌபாக்யமும் என்னிடம் திகழ்ந்தன.

ஆழமும் வேகமுமாக வரும் காட்டாற்றுத் தண்ணீர் அதிவிரைவில் வடிவதைப்போல என் அதிர்ஷ்டமும் என்பதை அப்போது நான் அறியவில்லை. மாதம் மெள்ள நகர்ந்து 10-வது மாதம் தொடங்கிற்று. ஒவ்வொரு நிமிஷமும் சின்ன எஜமானின் ஜனனத்தை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். என் கணவர் அநேகமாக வீட்டை விட்டே கிளம்புவதில்லை. என் அண்டையிலேயே இருந்து என் தேவைகளை அவரே பூர்த்திசெய்தார் ஓர் ஆண் மகவுக்காக அவர் எதைச் செய்யவும் சித்தமானர். அவர் ரூபமும் கனிந்த சொல்லும் என்னை வெகுவாக ஆகர்ஷித்தன. அந்தநாளும் வந்தது. என் உடலில் உபாதை கண்டது. நர்ஸ், லேடி டாக்டர் அனைவரும் தகுந்த சிகித்சை புரிந்தனர். கணவர் எனக்கு களை தட்டாமலிருக்க அவ்வப்போது பழ ரசம் பிழிந்து தந்தார். என்னையறியாமல் வீறிட்ட ஓர் சப்தம் என் இருதயத்திலிருந்து கிளம்பிற்று மறுவினாடி மூர்ச்சையானேன். சுமார் 1 மணி நேரம் கழித்து சுய உணர்வு அடைந்தபோது பக்கத்தில் சிசுவைக் காணவில்லை. ஆனால் லேடி டாக்டரும், நர்ஸும் பேசிக்கொள்வது என் செவியில் விழுந்தது.

லேடி டாக்டர்:—"அபூர்வ பிறவி. பத்திரிகையில் பார்த்திருக்கிறேன். இதை நேரிலேயே பார்க்கிறேன். பாவம்! குழந்தை வேண்டுமென்று ஆவலுடன் ஏங்கி எதிர்பார்த்த இந்த வீட்டு முதலாளிக்கு இந்தப் பிறவியை. மனித உடலும், ஆட்டைப் போன்றமுகமும், வாலும்! என்ன கோரஸ்வரூபம்! இதை இவரிடம் எப்படி காண்பிப்பது?—"

நர்ஸ்:—"பேசாமல் கண்காட்சி சாலைக்கு அனுப்பிவிடலாம்."

மேற்கூறிய அவர்களது சம்பாஷணை என் ஹிருதயத்தை ஊடுருவித் தாக்கியது. சாந்தி உண்டா?

கட்டுரையாளருக்கு

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமலிருக்க வேண்டும்.

— ஆசிரியர்

இராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார்
ஸ்வரப்படுத்தியது

இறைவனைக் காணும் இதயத்(து)
இருள்கெட, ஞானம் என்னும்
நிறைவிளக்(கு) ஏற்றிய பூதத்
திருவடித் தாள்கள், நெஞ்சத்(து)
உறைய வைத்(து) ஆளும் இராமா
நுசன்புகழ் ஓதும் நல்லோர்
மறையினைக் காத்(து) இந்த மண்ணகத்
தே, மன்ன வைப்ப வரே
மன்னிய பேரிருள் மாண்டபின்,
கோவலுள், மாமல ராள்
தன்னொடு மாயனைக் கண்டமை
காட்டும் தமிழ்த் தலைவன்
பொன்னடி போற்றும் இராமா
நு சற்(கு) அன்பு பூண்ட வர்தாள்
சென்னியில் சூடும் திருவுடை -
யார் என்றும் சீரி யரே

அரும்பதவுரை.

இறைவன்—பகவான்
பூதத்திருவடித்தாள்கள்—பூதத்தாழ்வாரின்—திருவடிகள்
உறைய—தங்க
மறை—வேதம்
மண்ணகத்தே—பூமியிலே
மன்ன—தங்க

விளக்கம்

கடவுளைக் காண விரும்பும் இதயத்திலே உள்ள இருள் போகும்படி ஞானம் என்னும் நிறைந்த விளக்கை ஏற்றி வைத்திருக்கிறாராம் பூதத்தாழ்வார். அந்த ஞானவிளக்கைத் தாமும் பயன்படுத்திக் கொண்டு பிறருக்கும் பயன்படுத்திக் காட்ட விரும்பும் இராமானுஜர் தமது நன்றிக்கு அறிகுறியாக அந்த ஆழ்வார்களின் திருவடிகளைத் தமது நெஞ்சிலே தங்க வைத்துக் கொண்டார். அத்தகைய இராமானுஜரின் புகழ் ஓதும் சாதுக்கள் வேதத்தைக் காத்து வேத நெறியையும் இம்மண்ணகத்தே நிலைபெறச் செய்வார்கள்.

அரும் பதவுரை

மன்னிய—பொருந்திய
மாண்டபின்—ஒழிந்தபின்
கோவலுள்—திருக்கோவலூரில்
மாமலராள் தன்னொடு—மகாலட்சுமியுடன்
மாயன்—மகாவிஷ்ணு
தமிழ்த் தலைவன்—இங்கே பேயாழ்வார்
தாள்—திருவடி
சென்னி—தலை
திரு—சம்பத்து
சீரியர்—சிறப்பு வாய்ந்தவர்

விளக்கம்

திருக்கோவலூரில் பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும், ஏற்றிய மொழி-விளக்கினால் இருள் மாண்டதும் அம்மையப்பனாக ஸ்ரீ லட்சுமி நாராயணமூர்த்தி தரிசனம் அளித்தாராம். அதைத் தமிழ்த் தலைவரான பேயாழ்வார் கண்டு காட்டுகிறாராம். அவருடைய அன்பர் இராமானுஜர். அந்த இராமானுஜரின் அன்பருக்கு அடியார்களும் பாக்கியசாலிகள். (பாசுரம் 9—10)

ராகம் : தன்யாசி　　　　தாளம் : ஆதி 2 களைச்சவுக்கம்

ஆ : ஸகமபநிஸ் — அ : ஸநிதபமகரிஸ 8-வது கர்த்தாவில் (ஹனுமதோடி) ஜன்யம்.

(பாட்டு 9—ம் 10—ம்)

;, கம பா தப கா பமகா ரிஸஸா | ரிநி ஸநி ஸா ஸாமக ம | பா, ரி பமகா மாபா ||
இறை வ னே . க்கா ணு . . மிதயத் . | . . தி . ருள் கெ . . ட | ஞா . ன . . மென்னும் ||

; கம பநிஸ்நி தபகா கமபா தபமகரீ ஸா | ஸகரிஸ ஸநி ஸா ஸாமகமா | பா, நி பமகா மபபா ||
நிறைவி . . . ள . க்கே . . . . . . , . ற்றி ய | பூ . த . த்தி . ரு வ . . டி | தாள் . கள் . . நெஞ் . சத் ||

; நிபமக மாபா பாபப பநிஸ்ாரிஸ் நிரிஸ்நி | தபா பநி ஸ்ஸ்ா | ஸ்ா, க்ரிஸ்ரிநி ஸ்ா ஸ்ா ||
து . றை . யவைத் தானுமி ரா . . . . . . மா . | . . னுசன் பு க | ழோ . தும் . . . நல்லோர் ||

; பநிஸ்நிக்ரி ஸ்ா ஸ்ா, ரிநிஸ்ா பபா, நிபநிஸ்ாரிஸ் | நி, ஸ்ரிஸ்நி தபா | கம பநி ஸ்ாரிஸ் நி தபமகா பம ||
மறையி . . . னேக்கா . த்து . . கி ந்த . . . . | . மண் . ண . கத்தே | மன் . . . ன . . . . வை . . ப்பவ . ||

கரிஸநி — ஸ ஸாமக மா பாபபா, பநி ஸ்ாரிஸ் | தபா கமபதப | கா கபமதபமகரி ரிஸ ||
. ரே . . — மன்னி . . ய பேரிருள் மாண் . ட . . . | பின் . கோ . வி . லுள் | மா ம . . . . ல . . . ராள் . ||

;, ஸ ஸநிகரி ஸா ஸா, க ரிஸரி நிஸாஸ | ஸாநிஸகா, ம. | பா, நி பமகா மப பா ||
தன்னெ . . . டு மா . ய . னே . க்கண்ட | மைகா . ட்டும் த | மிழ் . த்த . . லே . வன் ||

;, நிபமக ம பா பா பப பா, நி ஸ்ாரிஸ்நித | பதம பநிஸ்ாஸ் | ஸ்ா, க்ரிஸ்ரிநி ஸ்ஸ்ஸ்ா ||
பொன் . . ன டி போற்றுமி ரா . மா . . . . | . . . னுசற்கன்பு | பூ . . . . . டவர்தாள் ||

;, பநிஸ் ஸ்ா ஸ்நி ரிஸ்நிதப பநி பநி | ; பநிஸ்ரிஸ்நிதா பா | கமபநி ஸ்ா ; ஸ் நிதபம கா பம ||
சென்னியிற்சூடும் . தி . ரு . . வு . டை . | யா . . . ரென் . . றும் | சி . . . ரி . . . . . . ய ரே . ||

கரிஸநி — (ஸகாம பநிதப
. . . . — (இறைவனே . . .)

தற்காலப் பத்திரிகைகளுக்குப் பிரசுரிப்பதற்கு பிரமிப்பூட்டும் செய்திகள் தினசரி அத்யாவசியமாகும். அப்படியே என்றாவது ஒரு செய்தித் தட்டு ஏற்பட்டாலும் கிடைத்த செய்தியை மிகைப்படுத்தி வெளியிடுவது அவ்வளவு பிரமாதமல்லவே. பத்திரிகையில் சமீபத்தில் வெளியான ஒரு உண்மைச் செய்தியைக் காட்டிலும் வெகு சில கற்பனைகளே விசித்திரமாக இருக்க முடியும்.

ஆஸ்திரேலியாவைப் பார்க்க வந்திருந்த ஒரு விஞ்ஞானி ஆஸ்திரேலியர்களின் முகமும், முக லக்ஷணங்களும் கங்காருவைப் போல மாற ஹேது இருக்கிறது என்று கூறினதாக அச்செய்தியில் வெளிவந்திருந்தது. அதாவது ஆஸ்திரேலிய முகங்கள் பல தலைமுறைகளுக்கு முன்பு இருந்தவையைக்காட்டிலும் இப்பொழுது கூர்மையாக இருக்கின்றனவாம். காதுகள் நீண்டும் இருக்கின்றனவாம். சுருக்கத்தில் தன்னை ஆக்ரமிக்கும் மனித சமூகத்தை இயற்கை திருப்பி அடிக்கிறதாம். ஆஸ்திரேலியா தனக்கே பிரத்யேகமான ஒரு பிராணியின் உருவைப்போலவே, தன் நாட்டு மக்களின் முகங்களை மாற்றிக் கொண்டிருக்கிறது.

மற்றெல்லாச் செய்திகளையும் விட இது மிகவும் சுவாரஸ்யமானது என்பதில் ஐயமுண்டா? இதில் ஆச்சரியம், செய்திப் பசியால் துடிக்கும் நிருபர்கள் இச்செய்தியைக் கேட்டவுடன் துள்ளிக் குதிக்காது அதற்குரிய விளம்பரத்தை செய்யாததே. செய்தி வெகு சுருக்கமாகவும், விவரங்கள் இல்லாமலும் இருந்தது. எதை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப்பார்த்து, இந்த உரு மாறுதலுக்கு இடமிருப்பதாகக் கண்டு பிடித்தார்கள் என்று அது வெளியிடவில்லை. அதாவது எத்தனை தலைமுறைகளிலிருந்து ஆஸ்திரேலியா தன்னிடம் குடியேற வந்தவர்களின் உருவத்தில் தன் ஆதிக்கத்தை செலுத்தத் தொடங்கியது என்று நாம் அறியாமலேயே இருந்துவிடக் கூடும். ஆஸ்திரேலிய முகங்களின் சராசரி நீளமும், அகலமும் என்னவென்றோ, அல்லது அவர்களுடைய தாய் நாட்டிலுள்ளவர்களைக்காட்டிலும் ஆஸ்திரேலியர்களின் காது எவ்வளவு நீண்டதென்றோ அச்செய்தி தெரிவிக்கவில்லை. ஏற்பட்ட முகமாறுதல்கள் சந்தேகமில்லாமல் கங்காருவைப்போலத்தான் இருக்கின்றன என்ற தீர்மானத்துக்கு வந்தற்கு வேறு போதிய சாட்சியங்கள் இருப்பதாகவும் அந்தச் செய்தியில் இல்லை. நம்மில் சிலருக்காவது 'கூர்மை முகமும், நீண்ட காதுகளும்' என்ற லக்ஷணங்களைக் கேட்டவுடன் வேறு ஒரு பிராணியின் ஞாபகம்தான் வருகிறது.

தேக வளர்ச்சியில் சூழ்நிலையின் பங்கைப்பற்றி சரீர சாஸ்திரம் வெகு நாளாகவே ஆராய்ந்து வருகிறது. அப்பிரச்னைக்கு நம் யாத்ரிக விஞ்ஞானி முற்றிலுமொரு புதிய அர்த்தத்தை கற்பித்திருக்கிறார். பலர் பொறாமைப்படக்கூடிய அசாதாரண தைரியத்துடன் அவர், மனிதனின் வாசஸ்தலம் அவனுடைய சிரசின் அமைப்பைக்கூட பாதித்துவிடும் என்று ஒரு புதிய சட்டத்தையே இயற்றிவிட்டார். ஆஸ்திரேலியா தன் மக்களை கங்காருவைப்போல மாற்றத் தொடங்கினால் மற்ற நாடுகள் மாத்திரம் சளைத்தவையா...... ருஷ்யா வருங்கால கம்யூனிஸ்டுகள் சாக்ஷாத்கரடிகளைப்போல ஒருநாள் மாறிவிடலாம். அமெரிக்கரின் தேகக்கட்டை கூர்ந்து நோக்கினால், அமெரிக்காவிலிருந்து அவர்கள் ஒழித்த காட்டெருமைகளைப் போல காட்சியளிப்பதாக நமக்கு ஒரு பிரமை ஏற்படலாம். இயற்கை இச்சலுகையை முதலாவதாக ஆஸ்திரேலியரிடத்து காண்பித்தது ஏனோ? நம்மில் அனேகர், இயற்கையன்னை முதலில் முக்யமாக வேறு ஒரு குறிப்பிட்ட டொமினியனைத் தான் தேர்ந்தெடுத்திருப்பாள் என்று எதிர்பார்த்திருப்போம். பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் துரையின் ஆப்தர்களை முதலில் ஒட்டச்சிவங்கியைப்போல் மாற்றியிருந்தால் வெகு பொருத்தமாக இருந்திருக்கும். அப்பொழுது அவர்கள் உயரத்திலிருந்து அலக்ஷ்யமாக கருப்பர்களைப் பார்க்கலாமல்லவா?

இத்தத்துவத்தைப்பற்றி முடிவில்லாமலும், எல்லையற்ற சுவாரஸ்யத்துடனும் நாம் யோசித்துக் கொண்டே போகலாம். ஒரு தேசத்தின் மக்கள் அந்நாட்டிற்கே பிரத்யேகமான ஒரு பிராணியைப் போல மாறினால் எப்படி இருப்பார்கள் என்று நாம் கற்பனை செய்து பார்க்கும்போது, அது நமக்கு வேடிக்கையாக இருப்பதோடல்லாமல், உயிர் சாஸ்திர

நிபுணர்கள் (Biologists) தர்க்கிப்பதற்கு நல்ல விஷயதானமும் அளிக்கிறது. சாதாரண மனிதனுக்கு பூகோளத்தில் அதிக சிரத்தை ஏற்பட்டிருக்கிறது, இயற்கை ஏதோ ஒரு மாயக் கண்ணாடி வைத்திருப்பது போலவும், இனி எதிர் காலத்தில் மானிட சரீரம் எப்படி இருக்குமென்று அதில் பார்த்தால் அறிய முடியுமென்று கூட நாம் எண்ணும்படி இருக்கிறது.

என்னைப்பற்றிய மட்டில் இக்கதை எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. அதன் ஆசிரியரை நான் தூற்ற மாட்டேன். இருந்தாலும் சில ஆத்மாக்கள், அந்தக் கற்றறிந்த நிபுணரின் கூற்று தர்க்கரீதியாக எவ்வளவு தூரம் உண்மை, அப்படியானால் அதற்கான புள்ளி விவரங்கள் எங்கே என்று விசாரிக்கலாம். அற்ப மானிடர்களும், சார்ட்டார்ட் அக்கௌன்டன்டுகளும் (Chartered accountants) மற்றும் புள்ளி விவரங்கள் சேகரிப்பவர்களும் (statisticians) அவரை "எத்தனை ஆஸ்திரேலிய முகங்களை அளந்தீர்கள்?" என்றும் வினவலாம். அப்படி அளக்கப்பட்டவர்களும் அனேக தலைமுறைகளாக ஆஸ்திரேலியாவில்தான் வசிக்கிறார்கள் என்பதற்குப் போதுமான அத்தாட்சி எங்கே என்பார்கள். அப் ப்ரொபஸரின் கூற்றுக்கு ஆதார மூலம் எது என்று கேட்பார்கள். இன்னமும் அவரை அவமானப்படுத்தும் எண்ணத்துடன் தன் அளக்கும் நாடாவால் எத்தனை கங்காருக்களின் முகத்தை அளந்திருக்கிறார் என்றுகூட கேட்கலாம்.

தாங்கள் பெரும் மேதாவிகள் என்ற பாவனையில் அவர்கள் இப்படி நடந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. சிற்சில விதிகளாலும், கோட்பாடுகளாலும் எல்லா விசித்திரங்களுடைய ரகசியத்தையும் அறிந்து விடலாம் என்று இறுமாப்புள்ளவர்களே இப்படிக்கேள்வி பாணம் தொடுப்பார்கள். ஒரு நல்ல தத்துவம் எப்படி உண்மையினின்றும் பிறழ முடியும் என்று சதா அதற்கான புள்ளி விவரங்களைக் கிளறிக்கொண்டே இருப்பார்கள். இவர்கள் தேவதைக் கதைகள், மிருகக் கதைகள், பக்தியினால் ஏற்படும் விந்தைகள் எல்லாவற்றுடைய பரம விரோதிகள் பஞ்ச தந்திரக் கதைகளின் ஆசிரியர்களுக்கு மிருக சாஸ்திரத்தை கற்பிக்கத் தொடங்கி விடுவார்கள்; பாரதத்தின் ஆசிரியரான வியாஸரை சாக்ஷிக் கூண்டில் ஏற்றி விசாரணை தொடங்கி விடுவார்கள். மதத்தை விஞ்ஞானத்தால் வெல்லப் பார்ப்பார்கள். நந்தனாருக்கு சிவன் ஒரே இரவில் 60 வேலி நிலத்தை எப்படி அறுவடை செய்தார், அதற்கு (Ccmbine) கம்பைன் உபயோகித்தாரா? குசேலரின் குடில் ஒரே நிமிஷத்தில் மாளிகையாக மாற (Pre-Fabricated) வீடுகள் உபயோகித்தார்களா என்று குதர்க்கம் செய்ய ஆரம்பிப்பார்கள். ஒரு சுவாரஸ்யமான கதையை ரஸித்து அனுபவிக்கத் தெரியாத கூட்டத்தினர்.

சர்வமும் இடம், வேளை இரண்டையும் பொறுத்திருக்கிறது. அந்தப் புரொபஸர் நல்ல விருந்திற்கப்புறம் தமாஷாகப் பொழுது போவதற்காக இந்தக் கதையை கூறினாரென்றால் நாமும் அவர் சொல்வதை ஒத்துக்கொள்ளத் தயார். எதிலுமே நம்பிக்கை இல்லாதவர்கள்கூட அதை ரஸிக்கக் கூடும். மனிதன் மிருகமாவதைக் குறித்து, இந்தப் ப்ரொபஸருக்கு முன்பாகவே எத்தனையோ பேர் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். பண்டய சமயக் கதைகளிலெல்லாம் மனிதன் எப்படி சாபத்தாலோ அல்லது சூன்யத்தாலோ மிருகமாய் மாறிவிடுகிறான் என்று சொல்கிறார்கள். ஐரோப்பாவில் இதற்கான பிரதான உதாரணம் ஸிர்ஸ் (Circe) என்னும் மாது கையில் மந்திரக் கோலுடன் நிற்பதுதான் நம் புராணக் கதைகளிலும் சாபமும், சாபவிமோசனங்களும் முக்ய இடம் பெற்றிருக்கின்றன. பாமர மக்கள் கர்ம பலனால் ஆத்மாவானது ஒவ்வொரு பிறப்பிலும் மேம்பட்ட பிராணியாகவே ஜனிக்கிறது என்று திடமாக நம்புகிறார்கள். அப்படியே மனிதர்களிலும் ஒவ்வொரு பிறப்பிலும் ஆத்மா முன்பிலும் உயர்ந்த ஜாதியிலோ, அல்லது ஒரு ஸத்புருஷனாகவோ ஜனிக்கிறது என்று எண்ணுகிறார்கள்.

உயிர் ஏணியில் ஆத்மாவுக்கு ஏறலாமென்றால் சிலசமயங்களில் தவறி விழவும் நேரிடலாமே. ஆனால் இதிலிருந்து ஒரே நிமிஷத்தில் மாயவித்தைபோல் கீழ்த்தர பிராணியாக மாறவேண்டும் என்பதில்லை. உலகம் அறிந்த ஞானிகள், ஒரு தீச்செயல் மனிதனின் குணத்தையே இழிவுபடுத்திவிடுகிறது என்கிறார்கள். மிருக உருவாக மாறுவதைக்காட்டிலும் இது கேவலமல்லவா? இக்கருத்து நம் பாஷையில் உபயோகிக்கும் பல வாக்கியங்களிலும் தென்படுகிறது. மனிதன் மிருகமாக மாறிவிட்டான் என்கிறோம். தேசங்களின் அரசியல் நடவடிக்கைகளில் காடுகளில் காணும் சட்டங்களைத்தான் அனுஷ்டிக்கிறார்கள் என்கிறோம். சிலர் வாழும் விதத்தைக் கண்டு அவன் என்ன கேவலம் மிருக வாழ்க்கை நடத்துகிறான் என்கிறோம். ஆகையால் மொத்தமாகப்பார்த்தால்மனிதன் மிருகமாகிறான் என்றால் அவன் ஒரு படி சறுக்கி விழுந்துவிட்டான் என்றே சொல்வதாகும். மிருகம் எத்தனை நல்ல மிருகமானாலும் அது மிருகம்தானே. இந்தியர்கள் புனிதமான பசுவைப்போல் மாறுகிறார்கள் என்று ஒரு விஞ்ஞானி கூறினால், அது நம்மைப் புகழ்வதாகுமா?

பெயரளவில் மட்டுமல்ல: முக அளவில் கூட மனிதன் மிருகமாக மாறத் தொடங்கிவிட்டான் என்று அந்த விஞ்ஞானி விடுத்த செய்தி எல்லோருக்கும் பிரமிப்பூட்டியது. மிருகமாக மாறுவதைக் கண்டு ஏன் மனிதர்கள் இப்படி நடுங்கவேண்டுமென்றும் சில சமயம் தோன்றுகிறது. இந்த மாறுதலைப்பற்றி பிராணிகளின் அபிப்பிராயத்தை நாம் அறிந்தால் அது வினோதமாக இருக்கலாம். ஹிட்லர் ஒரு மிருகமாக மாறி வந்தால் அவை நல்வரவு கூறத் தயாராக இருக்குமா? இந்த அணுகுண்டு சகாப்தத்தில் யாராவது ஒரு மிருகத்திடம் மானிடனாக உனக்கு வரம் அளிக்கிறேன் என்று சொன்னால், வேண்டாம் சுவாமி, நான் மிருகமாகவே இருக்கிறேன் என்று கூறி அங்கிருந்து நழுவப்பார்க்குமோ?

அவருக்கு அவனது கொச்சை மொழிக் கேள்வியைக் கேட்டதும் சிரிப்பு வந்தது. "அது சரி! நீ யாரு என்று முதலில் சொல்லு'' என்ருர்.

"என் பெயர் ராமு. உங்க வீட்டுக்குப் பக்கத்தில் தான் எங்க வீடும்'' என்ருன் ராமு.

"ஓ! அப்படியா''' என்று சொல்லிவிட்டு, "நீயே உன் காத்தாடியை எடுத்துக் கொள்கிருயா, இல்லாவிடில் நானும் வரணுமா?'' என்று கேட்டார் அவர்.

"வேண்டாம், மாமா! நானே எடுத்துக் கொண்டு விடுவேன்'' என்று கூறிக் கொண்டு பங்களாவினுள் நுழைந்து தோட்டத்தின் பக்கம் சென்ருன். அங்கு அவனுடைய காற்ருடி ஒரு செடியுடன் உறவாடிக்கொண்டிருந்தது.

[சென்றவாரத் தொடர்ச்சி]

"ஓ! இந்தத் தெருவிலேயே என்னைப்போல காத்தாடி விடறவா ஒத்தர் கூடக் கிடையாது மாமா!'' என்ருன் ராமு.

"ஓகோ! நீ அதுலே ரொம்ப கெட்டிக்காரன்னு சொல்லு!'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் அவர். மேலும் தொடர்ந்து, "என்னை ஜெயித்துவிடுவாயா? நானும், நீயும் காத்தாடி விடலாமா?'' என்ருர்.

ராமுக்கு ஒரே ஆச்சர்யமாகப் போய் விட்டது. தன் தந்தை போலிருப்பவர் ஒருவர் காற்ருடி விடுவதை அவன் கண்டதும் இல்லை; கேட்டதும் கிடையாது. அவனுடைய தகப்பனர் கூடக் காற்ருடி விட்டது கிடையாது. அதற்குப்பதிலாக அவர் அவன் காற்ருடி விடுவதைக் கண்டித்துக் கொண்டேயிருந்தார்.

இந்தப் பங்களாவிலிருப்பவர் இம்மாதிரிச் சொன்னதும் அவனுக்கு அவரிடம் அளவு கடந்த அபிமானம் உண்டாயிற்று. "சரி, இப்போ காத்தாடி விடலாம் வரேளா?'' என்று சவால் கூறுபவன் போலக் கேட்டான் ராமு.

"ஊஹூம். இப்பொழுது என்னுல் முடியாது. எனக்கு அனேக வேலைகளிருக்கின்றன.'' என்ருர் அவர்.

"அப்படி என்ருல் என்கூட ராதையை அனுப்புங்கோ, நாங்க இருவரும் போட்டி போடறோம்'' என்று கூறினுன் ராமு.

"ராதையையா? அவளுக்குக் காத்தாடி விடத் தெரியாதே'' என்ருர் அவர்.

கூடவே வந்த அவரிடம், "இதோ பார்த்தீர்களா, மாமா! கண்டு பிடிச்சுட்டேன்'' என்று கூவினுன் சந்தோஷத்துடன்.

"உனக்குக் காத்தாடிவிடத் தெரியுமோ?'' என்று கேட்டார் அவர்.



"ஏன் நீங்க அவளுக்குக் கத்துக் கொடுக்கவில்லையா ?' என்று கேட்டான் மேலும். "அவளுக்கு ஒரு விளையாட்டுக் கூடத் தெரியாதா?'' என்ருன் ஏங்கிய குரலில்.

"ஓ! தெரியுமே. அவளுக்கு நிறைய ரப்பர் பந்து வாங்கிக்கொடுத்திருக்கேன். அதை



வைத்துக்கொண்டு விளையாடுவாள்'' என்ருர்.

"அப்படீன்னு, தரையிலே பந்தை தட்டிக்கொண்டே ஒண்ணு, இரண்டு என்று ஆடற விளையாட்டே? எனக்குக் கூடத்தெரியுமே அது! எண்ணிக் கொண்டே ஐந்நூறு, ஆறு நூறு கூட எடுத்துவிடுவேனே! ஆனுல் எங்கிட்ட இப்போ ஒரு பந்து கூட இல்லே. வாங்கிக்கொடுத்த பந்தையெல்லாம் தொலேச்சுடறேன்னு அப்பாவுக்குக் கூடக் கோபம். அதனுலே புதுப்பந்து வாங்கித் தரமாட்டேங்கருர்?'' என்ருன் வருத்தம் தொனிக்கும் குரலில்.

"அடடா அப்படின்னு நான் தரேன் உனக்கு!'' என்று கூறிவிட்டு அவனே உள்ளே அழைத்துச்சென்ருர்.

"ராதை! ராதை!!'' என்ற அவருடைய குரலைக் கேட்டு, ஏன் அப்பா!'' என்று கூவிக்கொண்டே ராதை ஓடி வந்தாள்.

"இதோ பார். உனக்கு ஒரு விளையாட்டுத் தோழனே அழைச்சிண்டு வந்திருக்கேன்'' என்று கூறி ராமுவை அணைத்துக் கொண்டார்.

அவ்விடத்தில் நுழைந்ததிலிருந்தே ராமு நிரம்ப ஆனந்தமடைந்தான். இதுவரையில் அவனைக்காட்டிலும் பெரியவர்கள் அவனுடன் இவ்வளவு அளவளாவிப் பேசியதில்லை. இந்த ஆசாமியிடம் அவனுடைய பிரியம் எல்லையற்றதாக இருந்தது.

* * * *

ராதையைக் கண்டு ராமு குதூகலமடைந்தான். இன்றைக்கு அவள் இன்னெரு கலரில் கவுன் அணிந்திருந்தாள். கறுத்த அவளுடைய சடை பின்னப்பட்டு ரிப்பன் வைக்கப்பட்டிருந்தது.

அன்று முதற்கொண்டு ராதைக்கும், ராமுவிற்கும் சிநேகம் பெருகியது. எப்பொழுதாவது ஒரு சமயம் தான் அவன் வீட்டிலிருப்பான். சில சமயங்களில் அவன் தாய் வந்து சாப்பாட்டிற்காக இழுத்துக்கொண்டு போகவேண்டியிருக்கும். பள்ளிக்கூட விடுமுறை தினங்களில் நேரம் முழுவதையும் ராதையின் வீட்டிலேயே கழித்து விடுவான் அவன்.

"இன்னெருவருடைய வீட்டிற்கு அடிக்கடி போகக் கூடாது'' என்று அவன் தாயும், தந்தையும் அடிக்கடி கண்டிப்பார்கள். அவன் அவர்களுடன் இது விஷயமாக வாதாடத் தொடங்கிவிடுவான். இதற்கு முன்னுலே பாலகோபால நாயக்கர் இருக்கறபோது அடிக்கடி போய்க்கொண்டிருக்கவில்லையா? அப்போ மாத்திரம் ஒண்ணும் சொல்லாமல் சும்மாத்தானே இருந்தீர்கள் என்பான்.

"சீ நாயே! அது வேறு விஷயம். நாயக்கர் ரொம்ப நல்ல மனிதர்'' என்பார் அவனுடைய தகப்பனுர்.

"அப்படியானுல் ராதையின் அப்பா ரொம்பக்கெட்டவரா?'' என்பான் ராமு கோபமாக. ஆனுல் வழக்கம்போல் அவன் ராதையின் வீட்டுக்குச் சென்றுகொண்டுதான் இருந்தான்.

அவன் தந்தை பேசுவது அவனுக்குப் புதிராக இருந்தது. அவனது பெற்ருேர்கள் ஏன் ராதையின் குடும்பத்தை வெறுக்கிருர்கள் என்று அவனுக்குப் புரியவில்லை. அவனேக் கேட்டால் ராதை வீட்டாரைப்போல் இப்பூவுலகெங்கும் தேடினுலும் கிடைக்கமாட்டார்கள் என்றுதான் கூறுவான்.

ராதை! அவளே எண்ணும் பொழுதே ராமுவின் நெஞ்சம் கூத்தாடிற்று. அவளுடைய தகப்பனுரையும் அவன் நிரம்ப நேசித்தான். ராதையுடன் விளையாட வேண்டும் என்ற எண்ணத்துடன் மட்டும் அவன் அவ்வீட்டிற்குப் போவதில்லை. முக்கியமாக அவளுடைய தந்தையுடன் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்று

தான். அவர் பேச்சை நாள் முழுவதும் கேட்டுக்கொண்டிருக்கவும் விரும்பினான்.

கிருஷ்ணமூர்த்தி-ராதையின் தகப்பனார். அவ்வளவு நன்றாக கதைகளும், விடு கதைகளும் சொல்லி வந்தார். ராமுவினுடைய மனம் அதைக்கேட்டுப் பூரிக்கும்; வருத்தமடையும்; ஆச்சரியப்படும்; பச்சாதாபமடையும். மேலும் ராதையின் தந்தை வேடிக்கை காட்டுவதில் சாமர்த்தியசாலி. ஏதாவது கதைகள் சொல்லிக் கொண்டிருப்பார். நடுநடுவில் மனிதர்கள் பேசுவதை தத்ரூபமாகப் பேசிக் காண்பிப்பார். பெண்கள் வார்த்தையாடுவதையும் குரலை மாற்றிப் பேசிக் காண்பிப்பார். இம்மாதிரியான ஒரு தன்மை அவரிடம் அமைந்திருந்தது. இது இரு குழந்தைகளுக்கும் ஒரு தமாஷ்!

* * * *

5

"ராமு! அப்பாவினுடைய படங்களைப் பார்க்கிறாயா?" என்று கேட்டுக்கொண்டே ஒரு நாள் ராதை ஒரு பெரிய புகைப்பட ஆல்பத்தைத்தூக்கிக்கொண்டு வந்தாள். அதைக் கண்டதும் ராமு படங்களைப்பார்க்க அவசரப்பட்டு அவளிடமிருந்து பிடுங்கப் பார்த்தான்.

"இரு, இரு. நானே காட்டறேன்" என்று ஆல்பத்தைப் பிரித்தாள்.

அதிலுள்ள புகைப்படங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே ராமுவின் ஆச்சர்யமும், உற்சாகமும்மேலும் மேலும்பொங்கிக் கொண்டிருந்தது. எல்லாம் ராதையின் தகப்பனார் படம் தான். ஆகா! என்ன அழகான உடைகளுடன் இருக்கிறார் என்று எண்ணினான். ஒரு படத்திலாவது ராதையின் தகப்பனார் இப்பொழுது இருப்பதுபோலில்லை.

"அடடே! உங்க அப்பா இதில் எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறார்!" என்று கூவி விட்டான் ஒரு பக்கத்தைத் திருப்பி. அதை நன்றாக உற்றுப் பார்த்தான். ஆனால் ராதை அப்பக்கத்தை அவசர அவசரமாகத் திருப்பிவிட்டு, "அந்தப் படத்தைப் பார்க்காதே. அதை இந்தப் புஸ்தகத்திலிருந்தே கிழிச்சுடப் போறேன்" என்றாள்.

"ஏன் அப்படி?" என்று ஆவலுடன் கேட்டான் ராமு.

ஆனால் ராதை ஒன்றும் பேசவில்லை. கண்ணீர் அவள் கண்களிலிருந்து பெருகிக் கொண்டிருந்தது. உதடுகளைக் கடித்துக்கொண்டாள்.

அந்தப்படத்தில் அவளுடைய தகப்பனார் ஒரு கிழிந்த சட்டையும், வேஷ்டியும் உடுத்தியிருந்தார். முகம் க்ஷவரம் செய்யப்படாமல் மீசை, தாடியுடன் காணப்பட்டது. வலது கையில் இருந்த ஒரு கண்ணாடிக் குவளையில் இடது கையிலிருந்த பாட்டிலிலிருந்து ஏதோ ஒரு திரவத்தை ஊற்றிக்கொண்டிருந்தபொழுது படம் பிடிக்கப்பட்டிருந்தது.

ராதையின் தகப்பனார் ஒரு சினிமா நடிகர் என்று மெதுவாக, அறிந்துகொண்டான் ராமு. ஏராளமாகச் சம்பாதிக்கிறார், ஏராளமாகச் செலவும் செய்கிறார் என்று தெரிந்தது. இப்பொழுதுகூட இந்த இடத்திற்குப் படப் பிடிப்பு விஷயமாகத்தான் சென்னையிலிருந்து வந்திருக்கிறார் என்றும் அறிந்தான். இது மேலும் அவனுக்கு அவரிடம் அன்பைப் பெருக்கிவிட்டது.

(தொடரும்)

மன்னனை ஆண்ட மங்கை

9

வெற்றி யாருக்கு ?

விஷ்ணுசித்தர் நந்தவனத்தில் இருக்கிறுரென்று தெரிந்து கொண்டதும், ராஜதூதன் அங்கே போய் நேரில் செய்திசொல்லவேண்டுமென்று தீர்மானித்தான். தீர்மானித்ததும், பல்லக்குப் போகிகளை அந்த வீட்டு வாசலில் இருக்கச் சொல்லிவிட்டுப் பூங்காவனத்தை அடைந்தான். அப்போது அங்கே மதுரைவல்லி விஷ்ணுசித்தருடன சம்பாஷித்துக்கொண்டிருந்தாள்.

விஷ்ணுசித்தருக்குத் தன்னை ஒரு கோபிகையென்று அறிமுகப்படுத்திக்கொண்டாள் மதுரைவல்லி. அதற்கு அவர் இளநகையரும்பிய வண்ணம், ‘நாமெல்லாரும் கோபிகைகள்’ என்றும், வெளி வேஷங்களை விட்டு உள்ளபடியே ஆத்மா கோபிகையாகும்போதுதான் கோபாலன் அருள்புரிவான்’ என்றும் சொன்னுர்.

அப்போது அவர் தன்னை நோக்கிய நோக்கு, குழந்தை தாயை நோக்குவதுபோல் ஒரு கணம் தோன்றியது. அடுத்த கணமே தாய் குழந்தையை நோக்குவதுபோலவும் இருந்தது. பிறகு அந்தப்பார்வை வேஷ ரகசியங்களையெல்லாம் ஊடுருவிப்போய் உண்மையைக் கண்டு கொண்டதுபோலத் தோன்றியது. அப்படிக் கண்டு கொண்டும், ‘இப்பெண்ணின் உள்ளம் நல்ல உள்ளம்தான்; பக்தியுள்ளமாக வளர்ந்து ஓங்கக்கூடும்’ என்று திருப்தியடைந்ததுபோலவும் தோன்றியது. இவையெல்லாம் மதுரைவல்லியின் உள்ளத்திலே தோன்றிய உணர்ச்சிகள்தாம்.

மதுரைவல்லிக்கு அப்பெரியாரிடம் என்ன என்னவோகேட்க வேண்டுமென்று எண்ணம் இருந்தது. ஆனுல், ஒன்றும் கேட்காமலே சந்தேகங்கள் தெளிந்து வந்தன என்றும் தோன்றியது. அப்போது விஷ்ணுசித்தர் சொன்னுர்: ‘பகவான் எங்கும் இருக்கிறுர்; அங்கும் இருக்கிறுர், இங்கும் இருக்கிறுர், எனினும் கோபிகையுள்ளத்தில் விசேஷமாக இருக்கிறுர்...’

அந்தப் பேச்சு முடிவதற்குமுன் விஷ்ணுசித்தரின் சீடர்களில் ஒருவன் அங்கே ஓடி வந்தான். வந்து, ‘யாரோ ஒரு ராஜதூதனும்; மார்த்தாண்டன் என்று பெயராம்; சுவாமிகளை!’ பார்க்க வந்திருக்கிறுனும். நியமனமானுல் அழைத்து வருகிறேன்’ என்றுன். உடனே அவர் அந்தச் சீடனை நோக்கி, ‘கோவிந்தா! உத்தரவு எதற்கு? பகவானுடைய தோட்டம்தானே இது? யாரும் இஷ்டப்படி வரலாமே’ என்றுர்.

‘மார்த்தாண்டன்’ என்ற பேரைக்கேட்டதும் மதுரைவல்லி ஒரு கணம் திகைத்துப் போனுள். ‘ஓஹோ! அவரே வந்துவிட்டாரா? நான் அவருக்குத் தெரியாமல் வேஷம் மாருடி வந்திருக்க, அவரும் எனக்குத் தெரியாமல் வேஷம் மாருடி வந்துவிட்டார். நான் அவருடைய வேஷ ரகசியத்தை அறிந்துகொண்டதுபோல், அவரும் என்னுடைய வேஷ ரகசியத்தை விரைவில் அறிந்துகொண்டு விடுவாரே! அதற்குள் நான் எங்கேயாவது மறைந்திருக்கவேண்டும்’ என்று நினைத்தாள்.

ஆனால் எப்படிப் பளிச்சென்று விஷ்ணுசித்தரிடம் விடைபெற்றுக்கொள்வது? சரி, ஒரு யுக்தி செய்தாள். அவரை நோக்கி, 'சுவாமி! ராஜதூதர் வந்து பேசும் இடத்தில் அடியாள் இருக்கலாமா? போய்வருகிறேன்' என்று சொல்லிவிட்டு நழுவ முயன்றாள். ஆனால் விஷ்ணுசித்தரோ, 'இங்கே இரகசியம் ஒன்றும் கிடையாது, எல்லாம் பரசியம்தான். ராஜா, ராணி, ராஜதூதன் எல்லாம் ஒரே தரம், ஒரே நிறை! பகவான் எங்கும் இருந்து எல்லாவற்றையும் பார்க்கும்போது இரகசியம் ஏது?' என்று சொல்லிவிட்டு, 'அம்மா! உன் பெயரென்ன?' என்று கேட்டார்.

'மதுரைவல்லி' என்று அவள் சிறிது யோசித்துப் பதில் சொல்லி வாயை மூடும்போதே, விஷ்ணுசித்தருக்கு எதிரில் வந்து ராஜதூதன், 'அடியேன் மார்த்தாண்டன்' என்று நமஸ்கரித்தான். நமஸ்கரித்து எழுந்ததும் அவன் விஷ்ணுசித்தருக்கு அருகே நின்று மதுரைவல்லியைக் கண்ணுற்றான், திகைத்து நின்றான். 'ஆஹா! எனக்கும் தெரியாமல் இந்த ஆய்ச்சி வேஷத்தில் இங்கு வந்திருக்கிறாள். இந்தக் கோலமும் இவளுக்கு எவ்வளவு அழகாயிருக்கிறது! இவளை இப்படி இங்கே சந்திக்கக்கூடுமென்று எதிர்பார்க்கவே இல்லையே! அன்றிரவு சிங்காரவனத்தில் "தோழி காத்திருக்கிறாள், அவசர வேலை இருக்கிறது" என்று சொல்லிப் போனது இதற்காகத்தானா?' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

அதற்குள் விஷ்ணுசித்தர் 'வந்த காரியம் என்ன?' என்று கேட்டார். அக்கேள்வி சரியாகக் காதில் விழவில்லை; எனினும் அதை ஊகித்துக் கொண்டு ராஜதூதன் பேசினான். 'பாண்டிய மன்னர் வித்துவான்களின் மகா சங்கம் ஒன்று கூட்டுவதாக உத்தேசித்திருக்கிறார். அந்தச் சபையில் பல்வேறு சமயங்களைச் சேர்ந்த பண்டிதர்களும் வந்து விவகரிப்பார்கள். அந்த விவகாரங்களிலிருந்து வடித்தெடுத்த உண்மைகளை நாடும் நகரமும் நன்கு பரப்ப விரும்புகிறார் அரசர். முக்கியமானவர்களை அழைத்து வரும்படி, தூதர்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் போயிருக்கிறார்கள். அடியேன் உத்தரவுப்படி இவ்விடம் வந்தேன். சுவாமிகளை அழைத்துப் போகப் பல்லக்கு வந்திருக்கிறது' என்றான்.

அதற்கு விஷ்ணுசித்தர் அமைதியாக வடபத்திரசாயி கோயில் இருந்த திசையைச் சுட்டிக் காட்டி, பிறகு தாம்தொடுத்து வைத்திருந்த பூமாலைகள் நிறைந்த கூடையையும் சுட்டிக் காட்டினார். அப்பால் அவர் ராஜதூதனை நோக்கி 'என் பகவானையும் அவன் உகந்த பணியையும் விட்டுவிட்டு நான் வரமுடியாது' என்று உறுதியான குரலில் சொல்லிவிட்டார். ராஜதூதன் திடுக்கிட்டான். காரியம் தோல்விதானோ?' என்று அஞ்சினான்.

அப்போது மதுரைவல்லி மார்த்தாண்டனை, 'இதுதானா வீரம்?' என்பது போல், ஒரு பார்வை பார்த்துவிட்டு, விஷ்ணுசித்தரை நோக்கிக் கைகூப்பிய வண்ணம், சுவாமி! பகவான் இங்கும்

இருக்கிறார். அங்கே மகுரையிலும் இருக்கிறார், எங்கும் இருக்கிறாரல்லவா? இப்படித்தானே அடியார்களுக்கு உபதேசித்தீர்கள்! ஏதோ கேட்கை அறியாமல் சொன்னேன். பொறுத்தருளவேணும்' என்றாள்.

அது கேட்ட ராஜதூதன், 'என்ன வா[illegible]கம்! இந்தப் பரமஞானியிடத்திலும் இப்படிப் பேசலாமா? பெண் புத்தி!' என்று எண்ணினான். விஷ்ணுசித்தரோ சிரித்துக்கொண்டே அவள் சொல்வதுதான் தம் கொள்கை என்று ஒப்புக்கொண்டார்; மதுரையிலும் தம் பெருமாள் இருப்பதாகவும், பகதி மதத்தையும் கைங்கரிய மதத்தையும் பரப்புவதே ஒரு பெருங் கைங்கரியம் என்பதாகவும் சொன்னார். அப்படிச் சொல்லிவிட்டு அவர் அவளுக்கு நன்றி தெரிவித்தார். மதுரைப் பெண்ணே! உன் உள்ளத்தில் கள்ளமில்லை, அது கோபிகை உள்ளம்தான்' என்றார்.

'பேதைப் பெண்; மன்னித்தருளவேணும்' என்றாள் அவள். அதற்கு அவர், 'கோபிகைகளின் பேதைப் பெண்மை. உண்மையாகப் பக்திக்காதல் கோபாலனுக்கு' என்று சொல்லிவிட்டு, 'ஒவ்வொருநாளும் வேளை தவறாமல் கோவிலில் கடவுளுக்குப் பூஜை புரியும் பட்டரின் உள்ளத்தைக்காட்டிலும் கோபாலன் உகப்பது கோபிகையின் பேதையுள்ளம்தான்!' என்றார்.

இப்படி விஷ்ணுசித்தர் சொல்லி முடித்தது தான் தாமசம், அங்கே கோவில்-பட்டாசாரியரான ஞானப்பிரான் வந்துசேர்ந்தார். அவருடைய முகத்திலும், கண்களிலும் கோபம் ஜொலித்துக்கொண்டிருந்தது. கோபிகையே பக்தியில் பட்டருக்கும் மேலானவள் என்ற விஷ்ணுசித்தரின் சித்தாந்தம், ஏற்கெனவே உள்ளத்தில் கனன்று புகைந்த கோபத்திக்கு ஆகுதியாகிப் பொங்கச் செய்துவிட்டது.

அதற்குள், 'காரியம் சித்தியாகிவிடும்' என்பதும், 'அதற்குக் காரணம் அம்மாள் தான்' என்பதும், ராஜதூதனுக்குத் தெரிந்து விட்டன. அவன், தான் கொண்டுவந்திருந்த பொன்னையும், இரத்தினங்களையும் விஷ்ணுசித்தருக்குப் பாத காணிக்கையாகவைத்து வணங்கினான். 'எதற்காக இந்தப் பொருளெல்லாம்?' என்று அவர் கேட்டதும் ராஜதூதன் சிறிது திகைத்து நின்றான், பொன்னையும், மணியையும் பழித்தொளிரும் முகத்தை நோக்கி.

உடனே 'பெருமாளுக்கு' என்றாள் கோபிகை. விஷ்ணுசித்தர் அந்தக் காணிக்கையை அப்படியே தூக்கிப் பட்டாசாரியர் முன்நீட்டி, 'இதோ உலாவும் பெருமாள்!' என்று கொடுத்துவிட்டார்.

மதுரைவல்லி பிரமித்தாள்; மார்த்தாண்டன் பிரமித்தான்; பட்டரும் பிரமித்துப்போனார். 'ராஜசம்மானங்களை—தமக்கென்று பாண்டிய

மன்னன் அபிமானித்து அனுப்பிவைத்திருக்கும் விலை உயர்ந்த பொருள்களை ஏன் இப்படி இவர் இவ்வளவு அலட்சியமாக என்னிடம் கொடுத்து விட்டார்?' என்று பிரமித்து நின்றபோதிலும், பட்டர் பணிச்சென்று, 'விஷ்ணுசித்தரின் உள்ளம் மாறிவிடுமோ?' என்று பயந்தவரைப் போல் இருகைகளாலும் வாங்கிக்கொண்டார்.

* * * * *

—அன்று இரவில் விஷ்ணுசித்தர் தாம் கொடுத்த மாலைகளை வடபத்திரசாயி—கோயிலில் பெருமாளுக்குச் சாத்தும்படி பட்டாசாரியரிடம் கொடுத்தார். அவர் ஒவ்வொரு மாலையாக எடுத்துப் பெருமாளுக்குச் சாத்தும்போது, அந்த உள்ளம் பொறாமையால் புகைந்து கொண்டு தான் இருந்தது. விஷ்ணுசித்தருக்கல்லவா தங்கப்பல்லக்கு வந்திருக்கிறது? வேதாகம பண்டித சிரேஷ்டராக நான் இருக்க, அரசன் இவரையல்லவா அழைக்கத் துணிந்தான் பண்டித மகா சபைக்கு? சம்மானங்களெல்லாம் இவருக்கல்லவா அனுப்பி வைத்தான்?' என்ற உள்ளப் புகைச்சலால், பட்டர் மாலைகளையும் சரியாகச் சாத்தவில்லை.

எனினும் கோவிலில் தரிசனம் செய்ய வந்திருந்த பக்தர்களெல்லாம், அந்தப் பூமாலைகளின் அழகையும், அம்மாலைகளால் மூர்த்திக்கு வந்துவிட்ட அழகையும், தெய்வகளையையும் வியந்தவண்ணமாயிருந்தனர். பட்டருக்கோ புகைச்சல் அதிகரித்தவண்ணமாயிருந்தது.

விஷ்ணுசித்தர், பெருமாளை நோக்கி நின்று, பாண்டியனின் பண்டித சபையில் வெற்றி பெறும் தகுதி தமக்கு இல்லையென்று பகிரங்கமாய் விண்ணப்பம் செய்துகொண்டார். அங்கே கூடியிருந்த பக்தர்களோ, விஷ்ணுசித்தரின் அபிப்பிராயத்துடன் அப்போதுதான் முரண்பட்டவர்களாய், 'மதுரைமாநகரில் பண்டித மகா சங்கத்திற்குப் போய் அந்தப் பொற்கிழியை அறுத்து வரும் தகுதியும், ஆற்றலும் விஷ்ணுசித்தருக்கே உண்டு' என்று சொன்னார்கள்.

விஷ்ணுசித்தரோ, 'அந்தப் பரிசு வேதசாஸ்திரங்களைக் கரைகண்டு உண்மை கண்ட நிபுணருக்கல்லவா? நான் போய் மண்வெட்டியைக் காட்டிக் கிழியறுக்க முடியுமோ?' என்றார். அப்போது பட்டரும் தமக்குள்ளே, 'இவரது கைத்தொழில்—திறன் பண்டித சபையில் என்ன செய்யமுடியும்? "வேதவாய்த் தொழில்" தான் மறந்து போய்விட்டதே!' என்று சொல்லிக் கொண்டார்.

பக்கத்திலிருந்த பக்தர்கள், 'உண்மையைக் கண்டு காட்ட இவரால் முடியாதென்றால், வேறு யாரால்தான் முடியும்?' என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். பெருமாள்—விக்கிரகமோ மாலையும் கழுத்துமாய், 'அழகும் நான்தான்; உண்மையும் நான்தான்; என்னை நானே காட்டுவேன், இந்த விஷ்ணுசித்தர் வாயிலாக'

என்று மோனப் பிரசங்கம் செய்வதுபோலக் காட்சியளித்தது. அந்தக் காட்சி விஷ்ணுசித்த ருக்கும், பக்தர்களுக்கும் ஒரு புதிய நம்பிக்கையையும், உத்ஸாகத்தையும் அளித்தது. பட்டரும் அன்று பெருமாள் அளித்த சேவையைக் கண்டு திகைத்துப் போனார்.

அந்த விக்கிரகத்தைக் கண்ணும் கருத்தும் குளிரத் தரிசித்துக் கொண்டிருந்தார் விஷ்ணுசித்தர். 'ஆ! ஆ! உள்ளத்தை உருக்கி உண்மை காட்டும் தெய்வ அழகு இது!' என்று எண்ணினார். 'இதை எப்படி வருணிக்கலாம்?, என்று எண்ணமிடும்போதே, விஷ்ணுசித்தருக்கு விக்கிரகம் மறைந்து, அகக்கண்ணுக்கு எதிரே ஒரு நீலமேகம் தோன்றியது. நீருண்ட நீலக்கார்முகில். அது காற்றிலே மிதந்துவந்தது கப்பல்போல. அம்மேகம் ஒரு மலையுச்சியை அடைந்ததும், அப்பால் போகாமல் அந்த மலையுச்சியிலே சாய்ந்துவிட்டது, மிகவும் களைத்துப்போன யாத்திரிகன் போலே.

ஒரு கணந்தான் இப்படி. அடுத்த கணமே மேகமும் மலையும் மறைந்துவிடுகின்றன. ஜில்லென்று பூத்த நீலமலர்கள், கண்ணோடு கருத்தையும் குளிர்விக்கின்றன. இப்படி ஒரு கணம்.

இந்த மலர்க்காடு மறைந்ததும், ஒரு கடல் அலைமேல் அலையாகிப் பொங்கிப் பரவிய ஓர் அழகுக் கடல்.

கடலும் போய்ப் பளிச்சென்று மயில்கள் கூட்டங் கூட்டமாகத் தோகை விரித்து ஆடத் தொடங்குகின்றன. அந்தக் காட்சியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார் விஷ்ணுசித்தர்.

தியானத்திலிருந்து விழித்துக்கொண்டார். விழித்துக்கொண்டும், தான் கண்ட அவ்வளவு அழகும் உண்மைதான் என்று தோன்றியது. முன்போல் விக்கிரகம் மாலையும் கழுத்துமாய், அந்த உண்மையை உறுதிப்படுத்துவதுபோலத் தரிசனம் அளித்தது.

விஷ்ணுசித்தர் ஆனந்த பரவசமானார். அந்த ஆனந்தத்திலே,

> குன்றோடு கொழுமுகில்போல்,
> குவளைகள்போல், குரைகடல்போல்,
> நின்றாடு கணமயில்போல்,
> நிறமுடைய நெடுமால்

என்று பாடினார்.

பாடி மேலும் பரவசமாகி இறைவனை நோக்கி 'அப்பா! நான் உன் அடிமை. உன்னுடைய அழகால் என்னை அணைத்துக் கொள்வாய். உன்னுடைய உண்மையை, நீயே எனக்குள் மறைந்திருந்து பாண்டிய ராஜ சபையில் வெளியிட்டு வெற்றிபெறுவாய்' என்று பிரார்த்தனை செய்து கொண்டார்.

விஷ்ணுசித்தரின் பாட்டையும் பிரார்த்தனையையும் கேட்டு ஆனந்த பரவசமாகிவிட்டது பக்தர் குழாம். அக்குழாத்திலிருந்து ஒரு பெண் குரல்கேட்டது. 'பகவான் தம்முடைய சித்தத்தை விஷ்ணுசித்தர் மூலமாக வெளியிடுவார். விஷ்ணுசித்தமே விஷ்ணுசித்தர்!' என்றது அக்குரல்.

எல்லாரும் அவளை நோக்கினார்கள். யாரோ ஒரு கோபிகை' என்று சொல்லிக்கொண்டார்கள். விஷ்ணுசித்தர் அவளை நோக்கிப் புன்னகை புரிந்து மறுபடியும் பெருமாளை நோக்கினார்.

பக்தர் கூட்டம் பட்டரை நோக்கி, 'ஆராதனத்தை முடித்து, விஷ்ணுசித்தர் விரைவில் வெற்றி பெற வேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டும்' என்று ஒருமுகமாய்க் கூறியது. பட்டரும் மனக் குழப்பத்துடன் ஒருவாறு ஆராதனத்தை முடித்துக்கொண்டார்.

விஷ்ணுசித்தர் பகவானை நோக்கி, 'கண்ணா! உலகத்திற்கெல்லாம் கண்ணே! உனக்குத் தெரியாததும் உண்டோ? நீ அப்போது அப்போது உகந்து காட்டும் கைங்கரியத்தில் ஈடுபடுவதுதான் அடியேனுக்குப் புருஷார்த்தம்' என்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்.

பிறகு பக்தர்களும், கோயிலைச் சேர்ந்தவர்களும், வில்லிபுத்தூர் வாசிகளும் ஒருமுகமாய் வேண்டிக்கொள்ள, பாண்டிய மன்னன் அனுப்பியிருந்த தங்கப் பல்லக்கில் ஏறிக்கொண்டார். 'விஷ்ணுசித்தர் வாழ்க; பல்லாண்டு வாழ்க' என்ற கோஷங்களுக்கிடையே புறப்பட்டது தங்கப் பல்லக்கு. வெண்சாமரைகளுடனும், வேறு ராஜசின்னங்களுடனும், விருதுகளுடனும் ஒரு கூட்டம் பல்லக்கைத் தொடர்ந்து சென்றது.

பல்லக்கு மறைந்ததும், ராஜதூதன் மதுரை வல்லி இருக்குமிடம் வந்து, 'கோபிகையே! இன்றைய வெற்றி உன் வெற்றிதான்' என்று புன்னகை புரிந்தான். 'நானும் ஆமோதிக்கிறேன்' என்று கூட்டத்தின் ஒரு புறத்திலிருந்து வேறொரு பெண் குரல் கேட்டது. குறத்தி மதுர வள்ளியின் குரல்தான் அது.

(தொடரும்)

ராமனும், கந்தனும்

★ எஸ் வெங்கடசுப்ரமணியன் ★

ராமனும், கந்தனும் ஏழைச் சிறுவர்கள். இருவரும் அனாதைகள். சாமான்கள் தூக்கி தங்கள் ஜீவனத்தை நடத்தி வந்தனர். அன்று ஒருநாள் இருவருக்கும் ஒரு கூலியும் கிடைக்கவில்லை. இருவரும் ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்தனர்.

கடைசியாக ஒரு ரயில் வண்டி வந்து நின்றது. வண்டியிலிருந்து ஒரு தனவந்தர் மூட்டைகளோடு இறங்கினர். சிறுவர்கள் இருவரும் மூட்டைகளை தூக்கிக்கொண்டு வர ஓடினர். தனவந்தருக்கு சிறுவர்களைப் பார்த்ததும் மிகவும் பரிதாபமாய் இருந்தது. மூட்டைகளை அவர்களிடமே கொடுத்தார். இருவரும் தூக்கிக் கொண்டு சென்றனர்.

தனவந்தர் வீடு அடைந்ததும் மூட்டைகளைக் கீழே வைத்தனர். தனவந்தர் இருவருக்கும் சில்லரையைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றார். அவர்கள் சந்தோஷத்தோடு கூலியைப்பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

இருவரும் ஏதாவது வாங்கிச் சாப்பிடலாமென்று எண்ணி பலகாரக்கடைக்குச் சென்றனர். அப்போது கந்தன் சில்லரையை எடுத்து விளக்கு வெளிச்சத்தில் பார்த்தான். கையில் ஒரு ரூபாய் நாணயம் மின்னுவதைக் கண்டு திடுக்கிட்டான். ஆச்சரியத்துடன் ராமனைப்பார்த்து, "ராமா, இங்கே பார். ஒரு ரூபாய் கொடுத்துவிட்டான், என் அதிர்ஷ்டமே, அதிர்ஷ்டம் உனக்கு என்ன கொடுத்திருக்கிறார் பார்" என்றான்.

ராமனிடமும் ஒரு ரூபாய் இருந்தது. "பாவம், அவர் தெரியாமல் கொடுத்துவிட்டார். அவர் கண்டுபிடித்தால் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்?" என்றான்.

"வீணாகப் பயப்படாதே. வா, வயிறார உண்ணலாம்" என்றான் கந்தன்.

"வேண்டாம் இதை அவரிடம் திருப்பிக் கொடுத்து விடுவோம். அதுதான் நியாயம், இல்லாவிட்டால் நமக்கு திருட்டுப்பழக்கம் ஏற்பட்டு விடும். நாளடைவில் பெரிய திருடர்களாகிவிடுவோம்" என்று ராமன் உபதேசம் செய்தான்.

உபதேசம் வீணாயிற்று, கந்தன் சாப்பிடச் சென்றான். ராமனே தனவந்தர் வீட்டை நோக்கி ஓடினான்.

இரவு ஒன்பது மணிக்கு ராமன் தனவந்தர் வீட்டுக் கதவை இடித்தான். அவர் வந்து கதவைத் திறந்ததும் ராமன் ரூபாயை அவரிடம் கொடுத்து விஷயத்தைக்கூறினான்.

அவர் அவனுடைய உயர்ந்த குணத்தை மெச்சி, ரூபாயை அவனையே வைத்துக்கொள்ளும்படி கூறினர். பிறகு அவனுக்கு தாய், தந்தை உண்டா என்று விசாரித்தார். அவனுக்குப்பெற்றோர், உறவினர் ஒருவரும் இல்லை என்று அறிந்ததும் அவருக்கு இரக்கம் உண்டாயிற்று. அவனை தன் வீட்டில் வேலை செய்துகொண்டு இருக்கும்படி கூறினர். ராமன் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டான்.

* * * * * *

சில நாட்கள் சென்றன. ராமனும் ஒழுங்காக வேலை செய்துகொண்டு வந்தான், ஒரு நாள் அவன் கீழே கிடந்த ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கே வந்த தனவந்தர் அவனைப்பார்த்து படிப்பதில் ஆர்வமா என்று கேட்டார். ராமனும் வெகு ஆர்வத்துடன் படித்துவந்தான். அத்துடன் வீட்டு வேலையையும் ஒழுங்காகக்கவனித்துக்கொண்டான்.

ராமன் பீ. ஏ. தேறியதும் தனவந்தர் அவனை சட்டப் பரீட்சைக்கு இங்கிலாந்துக்கு அனுப்பினர்.

சில ஆண்டுகள் சென்றன. ராமனுடைய வீட்டில் "எஸ். கே. ராமன் பி. ஏ. பார்-அட்-லா" என்ற போர்டு தொங்கியது. ராமன் சென்னை ஹைகோர்ட்டில் நீதிபதியாக இருந்தான். தனவந்தர் இறந்துவிட்டார். அவருடைய சொத்துக்கு அவனே அதிபதியானான்.

* * * * * *

அன்று சாயந்திரம் ராமன் கோர்ட்டிலிருந்து வந்ததும் சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பழைய சம்பவங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. "கந்தன் என்னவானனே பாவம் இந்த மகானுபாவனல் அல்லவா

நான் இன்று இந்நிலையில் இருக்கிறேன்'' என்று தனவந்தர் படத்தைப்பார்த்த வண்ணம் சிந்தனை செய்து கொண்டிருந்தான் அன்றிரவு அவனுக்கு வெகு நேரம்வரை தூக்கம் வரவில்லை. கந்தனைப் பற்றியே அவன் மனம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது

மறுநாள் காலையில் அவன் விசாரணைக்கு வந்த முதல் கேஸ் ஒரு பாங்கிகொள்ளைக் கேஸ் விசாரணை ஆரம்பமானதும் ஜவான், வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை கூப்பிட ஆரம்பித்தான். ஜவான் முதலில் "கந்தன்'' என்று கூப்பிட்டான். ராமன் இதைக்கேட்டு திடுக்கிட்டான். பிறகு ஆளைப் பார்ப்போமென்று சமாதானம் கொண்டான்.

கந்தன் வந்து கூண்டில் ஏறினான். கந்தன் ராமன் இருவர் கண்களும் சந்தித்தன. கந்தன் தன் வாக்கு மூலத்தில் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். "கனவானே, நான் இளமையில் தங்கள் சொல் கேளாமையால் இப்பொழுது இந்நிலையில் இருக்கிறேன்'' என்று அவன் கண்ணீர்விட்டான்.

தீர்ப்பு அளிக்கும்போது நீதிபதி ராமன், கந்தனுக்கு ரூ 500 அபராதம் போட்டான். உடனே ராமன் தன்னிடமிருந்து அந்தத் தொகைக்கு ஒரு செக்கைக் கொடுத்து கந்தனை விடுவித்தான்.

நீதிபதியின் உயர்ந்த குணத்தை எல்லாரும் மெச்சினர். ராமன், கந்தனை தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் பல புத்திமதிகள் கூறினான். பிறகு அவனை தன் காரியதரிசியாக நியமித்துக்கொண்டான். கந்தனும் திருந்தி நல்லவனாக மாறினான்.



டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

DENA BANK
DEVKARAN NANJEE BANKING Co. Ltd.

தலைமை ஆபீஸ்: பம்பாய் & 47 கிளை ஆபீஸ்கள்

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	100,00,000
வாக்களிக்கப்பட்டு செலுத்தப்பட்டது	,,	50,00,000
ரிசர்வ் நிதி	,,	15,00,000
மொத்த டிபாசிட்டுகள் 31-12-47	,,	6,66,00,000
மொத்த நடை முதல் நிதி ,,	,,	8,03,00,000
கணக்குகள் நிதி	,,	62,000

உள்ளூர் கிளை:

29, லிங்க செட்டி தெரு, ஜி. டி., மதராஸ்.

ப்ரொவீன் சந்திர V. காந்தி,
மானேஜிங் டைரக்டர்.

Try
ATOM INK
in your pen
SHETH & CO.
72, CHAMPA GALY BOMBAY 2.

"சுதேசமித்திரன்" உதவி ஆசிரியர் ஸ்ரீமான் எஸ். பாஷ்யத்தின் குமாரியும், ரிடயர்டு தாசில்தார் ஸ்ரீமான் டி. ஆர். சடகோப ஐயங்கார் பேத்தியுமான ஸௌ. வேதவல்லிக்கும், நாகப்பட்டினம் எஸ். ஐ. ஆர். ஸ்டோர்ஸ் பிரதம குமாஸ்தா ஸ்ரீ ஏ. ராமஸ்வாமி ஐயங்கார் புத்திரன் சி. ஆர். கிருஷ்ணமாச்சாரிக்கும் சென்ற வாரம் சென்னையில் விவாஹம் நடைபெற்றது.

அட்டைப்படம்

டில்லியிலிருந்து விமானத்தில் 4-மணி நேரம் பறந்து சென்றால் ஸ்ரீநகரை அடைந்து விடலாம். தினசரி இந்த மாதிரி யாத்ரீகர்கள் விமானத்தில் காஷ்மீர் போகிறார்கள். மே மாதத்திலிருந்து 6-மாதம் வரையில காஷ்மீர் வாசம் மகோன்னதமாயிருக்கும். பலலேக்கிட்டும் குளிர் இப்போது அங்கில்லை. காஷ்மீர் அற்புதக் காட்சியொன்றே இவ்விதழின் அட்டையில் தோன்றுகிறது.



"எழுத்தாளர்:—எடிடர் ஸார்! ஒரு சிறு கதை எழுதியிருக்கேன். காண்பிக்கலாம்னு வந்தேன்!......"



"தி என்ட் ஆப் தி ரிவர்" என்ற புதிய பிரிட்டிஷ் படத்தில் இந்திய நடிகர் ஸாபுவுக்கு வேஷமுண்டு. மேற்படி படத்தில் கதாநாயகியாகத் தோன்றும் பிபி பெரீரியாவும், ஸாபுவும் இப்படத்தில் தோன்றுகின்றனர்.

சக்தி ஆரூடம்!

புகழ்பெற்ற "சக்தி பால ஜோதிடரால்" வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். அண்ணாமலை யூனிவர்சிட்டி வித்யா ரத்ன Prof. R. ராமானுஜாச்சாரி M.A., கூறுவது:–'தங்கள் சாஸ்திர ஆராய்ச்சியையும் எதிர்கால பலன்கள் கூறும் திறமையையும் நான் மிகவும் மெச்சுகிறேன். பலன்களில் எனக்கு மிகவும் திருப்தி' 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் எழுத ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்திகவசம் ரூ. 7-8-0. வி. பி. பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும். N. B. வெளிநாட்டிற்கு முன்-பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஒளஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப்பிரசாதமான மருந்து தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன் 50 வேளை ரூ. 25.

வைத்தியபதி R. M. நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)

விநோத கதா மஞ்சரி விலை ரூ. 1—0—0 (தபால் செலவுபிரத்யேகம்)

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன, ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்யேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936.)

சரும & தலை நோய்களை



உலகப் புகழ் பெற்ற ஜாம்-பெக் குணப்படுத்தும்

ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை மருந்து வஸ்துக்கள் சருமத்தினூடே புகுந்து வேலை செய்வதால் நமைச்சல், ரணம் போய், ரத்தக் கசிவு நின்று நோய் கிருமிகள் நாசமாகி பாதிக்கப்பட்ட சருமத்தை ஜாம்-பெக் சீக்கிரம் குணப்படுத்தி ஆரோக்கியமாகவிருக்கவும் செய்யும். மிருக கொழுப்பில்லாததற்கு உத்தரவாதம்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்

சருமநோய்கள் காயங்கள், பூச்சிகடிகள், புண்ணாகி வலிக்கும் கால்கள், நசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாச மருந்து

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் நாநா & கம்பெனி, பி. டி. மதராஸ்

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் **வேஷ்டிகள்**

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ். | 9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்து விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம் இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வத்ரம், ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஓரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.
ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

இவ்வுலகவாழ்க்கையில் வெற்றி பெற விரும்புவோருக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். மெஸ்மெரிஸம், ஹிப்னாடிஸம், மானிட வசியம் முதலிய சாஸ்திரங்களின் இரகசியத்தை அனுபவ சாத்தியமாக விளக்கிக்கூறும் அருமையான இரகசிய நூல். இந்நூலைப்படித்த பின் இதன் அருமையை நீங்கள் நன்குணர்வீர்கள். கண் கவரும் வனப்பு வாய்ந்த சிறந்த நூல். இதன் முன் பதிப்புக்களில் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் செலவாயிருப்பதே இதன் மேன்மையைக் குறிக்கும். இன்றே உங்கள் பிரதிக்கெழுதுங்கள்.

விலை ரூ. 4—8—0

தபால் செலவு அணா 10.

எஸ். ஜே. புக் டெப்போ
30, சாந்தோம் : சென்னை 4.

கொழும்பில் கெய்ஸர் வீதி, 166 K. மதார் சாஹிப் இடமும் கிடைக்கும்.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஜாதகம்! ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

'மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்:
வால்டேர், ஆர். எஸ்.

லக்ஷ்மி & கோ.,
2/135, பிராட்வே, மதராஸ்.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி



லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

உடனே கொல்லும்... நீடித்த பலன்...



உடனேயே சாகடிக்க

பிளிட் காரமான பிரீத்ரம் கலந்தது.

உபயோகிக்கும் சமயம்
ஈக்கள், கொசு மற்றுமுள்ள பூச்சிகள் தொந்திரவு செய்யும் பொழுது.

உபயோகிக்கும் முறை.
சன்னல்களையும் கதவுகளையும் மூடிவிட்டு அறை முழுதும் பிளிட்டை ஸ்பிரே செய்யவும்.

பலன்
ஸ்பிரே செய்யப்பட்ட பிளிட் பூச்சிகளை உடனே கொன்று விடுகிறது.





நீடித்த பலனளிக்க

பிளிட் 5% D.D.T. கலந்த சர்பேஸ் ஸ்பிரே.

உபயோகிக்கும் சமயம்
பூசசிகளினால் இனி தொல்லை ஏறபடாமலிருப்பதற்காக.

உபயோகிக்கும் முறை
சுவர்கள் கூரை இவைகளின்மேல் பிளிட் சர்பேஸ் ஸ்பிரேயை (Flit Surface Spray) தெளிக்கவும். இவ்விதம் ஸ்பிரே செய்த இடங்களெல்லாம் பூச்சிகளுக்கு ஆபத்தானவை.

பலன்
ஸபிரே செய்த இடங்களை பூச்சிகள் தொட்ட மாத்திரத்திலேயே செத்து விடுகின்றன.

இன்றே பிளிட் சாமான்களை வாங்குங்கள்
மற்றவைகளை தொடாதீர்கள்.

F8-2 **பிளிட்**

பிளிட் — உலகில் அதிகமாக விற்கும் கிருமிநாசினி

Quality always tells!
hence BUY **L.G** ASAFOETIDA



எல். ஜி பெருங்காயமே உயர்ந்தது

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

" சுதேசமித்திரன் " புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

Printed and Published by S. Chakrapani Iyengar, at the "Swadesamitran" Power Press, 'Victory House' Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No 2514.

தீர்ப்பு!

"வாணி விலாஸ்"
பி. ஆர். ஸ்கொயர்,
சென்னை, டிசம்பர் 7, 1945.

இன்றைக்கு தென்னிந்தியாவில் பிரசித்திபெற்ற நகை வியாபாரிகள் தாங்கள் என்பதற்கு சந்தேகமில்லை. தங்கள் பெயர் தங்கள் வைரங்களைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது.

இந்தியாவின் வைரக் கலை உலகப் பிரசித்தி பெற்றது. இவ்வற்புதக் கலையில் தாங்கள் அடைந்த சில நூதன நிறைவேற்றங்கள் நினைவு படுத்திக் கொள்ளத்தகுந்தது.

தாங்கள் எப்பொழுதும், ஜாக்கிரதையாகவும், நேர்வழியுடனும் வேலைத் திறனுடனும், திருப்திகரமாகவும் வேலை செய்கிறீர்கள் என்று அத்தாட்சி கூற நான் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

தங்கள் வியாபாரம் எக்காலத்திலும் முன்னேறி இந்தியா முழுவதும் தங்கள் பெயரும், புகழும் பரவும் என்று எதிர்பார்க்கிறேன்.

வி. வி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார்,
—பி. ஏ., பி. எல்., அட்வகேட்.

ஸூரஜ்மல்ஸ்

வைரங்கள்

313, நேதாஜி ரோட், : : சென்னை.